சன் தொலைக்காட்சியில்

நேருக்கு நேர்

பேராசிரியர். க. அன்பழகன்

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

நூலக நூல்கள்

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

'சன்' தொலைக்காட்சியில்

நேருக்கு நேர்

பேராசிரியர் க. அன்பழகன்

முத்தமிழ்ப் பதிப்பகம்
10அ, இராசா அண்ணாமலை தெரு
புரசைவாக்கம்
சென்னை – 600 084

பேராசிரியர் க. அன்பழகன்
பவளவிழா வெளியீடு

திசம்பர் 1997

சன் தொலைக்காட்சியில்
நேருக்கு நேர்
பேராசிரியர் க. அன்பழகன்

வெளியீடு
முத்தமிழ்ப் பதிப்பகம்
10அ, இராசா அண்ணாமலை தெரு
புரசைவாக்கம்
சென்னை – 600 084
விலை : உரு. **மூன்று**

அச்சுக்கோர்ப்பு
சிம்புள் கணினி
சென்னை – 600 005
✆ : 8588466

அச்சு
அன்னம் மறுதோன்றி அச்சகம்
சென்னை – 600 005
✆ : 8588466

பேராசிரியர் க. அன்பழகன்

பவளவிழா வெளியீடு

பேரன்புடையீர்,

வணக்கம்.

திராவிட இயக்கத்துக்குத்

தம்மை முழுமையாக ஒப்படைத்துக்

கொண்ட **பேராசிரியர்** அவர்களைத்

திரு. வீரபாண்டியன் பேட்டி கண்டதை

நேருக்கு நேர் நிகழ்ச்சியில்

2–11–97 மற்றும் 9–11–97 நாள்களில்

'சன்' தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

அந்நிகழ்ச்சித் தொகுப்பினைப்

பேராசிரியர் அவர்களின் 'பவளவிழா'வை ஒட்டி

முதல் நூலாக வெளியிடுவதில்

பெருமகிழ்ச்சியடைகிறோம்.

10அ, இராசா அண்ணாமலை தெரு

புரசைவாக்கம்

சென்னை – 600 084

– முத்தமிழ்ப் பதிப்பகத்தார்

சன் தொலைக்காட்சி -
நேருக்கு நேர் நிகழ்ச்சியில்
மாண்புமிகு கல்வி அமைச்சர்,
பேராசிரியர்

பேட்டி காண்பவரின் அறிமுக உரை

கழகத்தின் முதுபெரும் அரசியல் தலைவர்களில் ஒருவரும், இன்றையத் தமிழக அமைச்சர்களில் மூத்த அமைச்சர்களுள் ஒருவருமான மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் இன்றைய 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் இடம் பெறுகிறார். பழைய தஞ்சாவூர் மாவட்டத்தில், திருவாரூரை அடுத்த காட்டூரில் 1922ஆம் ஆண்டு பிறந்த பேராசிரியருக்கு இப்போது வயது முக்கால் நூற்றாண்டு. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்த காலத்திலேயே சுயமரியாதை வீரராக வாழ்க்கை யைத் தொடங்கியவர். தாய்மொழியாம் தமிழ் மீது பற்றுக் கொண்ட தளராத ஆர்வத்தின் காரணமாக **இராமையா** என்ற தனது இயற்பெயரை **அன்பழகன்** என்று மாற்றிச் சூட்டிக் கொண்டவர். கடந்த 20 ஆண்டுக் காலமாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பொதுச்செயலாளராகப் பணியாற்றும் இவர், அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய நாளிலிருந்து, ஆடாமல், அசையாமல் ஒரே இயக்கத்தில் இருக்கும் தமிழகத்திலே உள்ள ஒரு சில அரசியல்வாதிகளில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்க செய்தி. நல்வாழ்வுத்துறை அமைச்ச ராகவும், கல்வித்துறை அமைச்சராகவும், நாடறிந்த நல்ல தமிழ்ப் பேச்சாளராகவும், பல நூல் ஆசிரியராகவும், பலப்பல பாராட்டுப் பெற்ற இவரைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். பூக்கடைக்கு விளம்பரம்

தேவையில்லை என்பார்கள். எனவே இவரை இனி நேருக்கு நேராகச் சந்திப்போம்.

பேட்டி காண்பவர் (திரு. வீரபாண்டியன்)

வணக்கம்! திராவிடர் இயக்கம் என்ற மகத்தான ஆலமரத்தின் விழுதுகளில் நீங்களும் ஒருவர். எந்த நோக்கத்திற்காக இந்தத் திராவிட இயக்கம் தோன்றியது? எந்த இலட்சியத்திற்காக, இது வேராக, இதயமாக இருந்தது என்று சொல்லமுடியுமா?

பேராசிரியர் (க. அன்பழகன்)

திராவிட இயக்கம் மொழி, கலாச்சார அடிப்படையில் தென்னாட்டு மக்களுடைய வாழ்வோடு பொருந்திய ஒன்றாகத் தோன்றியது. குறிப்பாக இந்த நாட்டினுடைய பெரும்பான்மையான மக்கள், திராவிட இனம் என்று அழைக்கப்படக்கூடியவர்கள் கல்வியிலே, அரசு அலுவல் களிலே எல்லாம் மிகவும் பின்தங்கியிருந்தார்கள். அந்த மக்களைத் தவிர மற்றவர்கள், வேறு இன அடிப்படை யிலோ அல்லது சமூக அடிப்படையிலோ தனித்தன்மை யுடையவர்கள், கல்வி நிலையங்களிலே 100க்கு 90 பேராக, அரசு அலுவல்களிலே 100க்கு 90 பேராக இடம் பெறக்கூடிய ஒரு வாய்ப்பும், 100க்கு 90 பேருக்கு மேற்பட்டவர்களாக இருந்த இந்த நாட்டினுடைய இயல்பான குடிமக்கள் 100க்கு 5 இடங்கள் கூடப் பெறமுடியாமலும் இருந்தது. இந்த நூற்றாண்டினுடைய தொடக்கத்திலும், 20வது 30வது ஆண்டுகள் வரை யிலும் அந்த நிலையிருந்தது. எனவே கல்வி நிலையத்தி லேயும், அரசு அலுவல்களிலேயும் இந்த நாட்டினுடைய இயல்பான குடிமக்கள் இடம் பெறவேண்டும் என்ற அடிப்படையில் தோன்றியதுதான் நீதிக்கட்சி.

நீதிக்கட்சியினுடைய முதல் குரலே ஆதிக்கம் பெற்ற சமூகத்தைத் தவிர மற்றவர்களுக்கும் தகுந்த இடம் இந்த நாட்டினுடைய கல்வி நிலையங்களில், அரசு அலுவல் களில் கிடைத்தால்தான், அவர்கள் உரிமையோடு வாழ

முடியும் என்ற அடிப்படையிலேதான் பிறந்தது. முதல் குரல் 1916இல் எழுப்பப்பட்டது. கல்வி நிலையத்திலோ அல்லது அரசு அலுவல்களிலோ பங்குபெற்றாலுங்கூட, சமூகத்திலே நிலை நாட்டப்பட்டிருக்கிற இழிவு, பழி, தாழ்வு, இவையெல்லாம் துடைக்கப்படவேண்டுமானால் தமிழ்நாட்டு மக்கள் சமூக உணர்வோடு சிந்திக்கின்ற ஒரு பக்குவத்தைப் பெறவேண்டும் என்ற அந்த அடிப்படையிலேதான் பெரியார் அவர்கள் தேசியவாதியாகப் பல ஆண்டுகள் தொண்டாற்றினாலுங்கூட, சமுதாய விழிப் புணர்வு ஏற்படுத்துவதற்காகச் சுயமரியாதை இயக்கத்தை உருவாக்கி, பகுத்தறிவுக் கொள்கையை இந்த நாட்டிலே முதன்முதலாகப் பரப்பத் தொடங்கினார். ஒன்று **உரிமை இடம் பெறுவது**. இன்னொன்று **பிறவி இழிவைத் துடைப்பது**. இவை இரண்டும் ஒன்று சேர்ந்து, ஒன்றுக் கொன்று ஆதரவாக அந்த எண்ண ஓட்டங்கள் அமைந்த தால்தான் **திராவிட இயக்கம்** உருப்பெற்றது.

நீதிக்கட்சியினுடைய தலைவராகத் தந்தை பெரியார் அவர்களே அமையவேண்டிய ஒரு காலக்கட்டம் இந்தி எதிர்ப்பு காரணமாக, இந்தித் திணிப்பைத் தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற் காக ஏற்பட்ட போராட்டத்தினுடைய விளைவாக அமைந்தது. அப்படித் தந்தை பெரியார் அவர்கள் நீதிக்கட்சியினுடைய தலைவராக ஆனபோது, நீதிக்கட்சியினுடைய கோட்பாடுகளைச் சுயமரியாதை உணர்வோடு பரப்பி அந்த இயக்கத்தை வளர்க்கிற ஒருநிலை உருவாயிற்று. அதனுடைய தொடர் விளைவுதான் நீதிக்கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, பார்ப்பனர் அல்லாதார் இயக்கம், என்றெல்லாம் அழைக்கப்பட்ட அந்தக் கட்சி, சுயமரியாதை இயக்கத்தோடு சேர்ந்து, அந்த உணர்வு வெளிப்படத்தக்க வகையில் **'திராவிடர் கழகம்'** என்ற பெயரில் அழைக்கப்பட்டது. 1944வது ஆண்டு தந்தை பெரியார் அவர்கள் தலைமையிலே நடைபெற்ற சேலம் மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்களால்

கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மூலமாகத் திராவிடர் கழகம் என்று நீதிக்கட்சி பெயர் பெற்று, இந்த நாட்டு மக்களுடைய இன இழிவைத் துடைப்பதற்காக அந்த இயக்கம் ஒரு பெரிய அடிப்படையை வகுத்துக்கொண்டு, செயல்படத் துவங்கியது. அதுதான் திராவிடர் இயக்கத்தினுடைய வேராக, மூலமாக அமைந்திருந்தது.

பேட்டி காண்பவர்

கடவுள் இல்லை. இல்லவே இல்லை. கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி. கற்பிப்பவன் முட்டாள். இப்படியெல்லாம் கடுமையான மொழியிலே தந்தை பெரியார் அவர்கள் தாக்கிப் பேசினார். தந்தை பெரியாரை விட்டு வெளியே தி.மு.க. வந்தபோது, அறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற முழக்கத்தை வைத்தார். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற முழக்கமே தந்தை பெரியாரை விட்டு வெகுதூரம் விலகி வந்த ஒரு வாசகமாகாதா?

பேராசிரியர்

பெரியார் அவர்களேகூடக் கடைசி சில ஆண்டுகள் கடவுள் இல்லை என்பதைக் கட்டாயமாகச் சொல்ல வேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு அதைச் சொன்னார்கள். தொடக்கத்தில் பெரியார் அவர்களேகூடச் சுயமரியாதை இயக்கத்தினுடைய முதல் 10, 15 ஆண்டுக் காலத்தில் கடவுள் பெயரால் நடைபெறுகிற கயமைகளைத்தான் கண்டிக்கிறேன். கோயில் கட்டி ஆறு கால பூசை நடத்துவதைத்தான் நான் கண்டிக்கிறேன். அங்கே இரண்டு பேர் பிராமணர்களோ, புரோகிதர்களோ இருந்து அர்ச்சனை நடத்தி, மற்றவர்களை எல்லாம் பிறவிச் சூத்திரர்களாக நடத்துவதைத்தான் நான் கண்டிக்கிறேன். அதுவே தவிர கடவுள் இருப்பதைப் பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை என்று பேசியவர்தான் தந்தை பெரியார் அவர்கள்.

ஆனால் அவர் எடுத்துச் சொன்ன சுயமரியாதைக் கொள்கை, மனிதாபிமான இலட்சியம், சமத்துவ

உணர்வு, இவைகள் எல்லாம் வைதீக நெறியினரால் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டன. ஒரு காலக் கட்டத்திலே வைதீக நெறியினர் தாக்கினார்கள். இன்னொரு காலக் கட்டத்தில் சைவ நெறியினர் தாக்கினார்கள். அவைகளை எல்லாம் பார்த்து இவர்கள் நம்மைத் தாக்குவதற்கான காரணம், எதிர்ப்பதற்குக் காரணம், கடவுள் நம்பிக்கை மக்களிடத்திலே இருக்கிற காரணத்தால், அந்த நம்பிக்கை யைத் துணையாக்கி அதன் பெயரால் சுயமரியாதைக்கு இழுக்கு ஏற்படுத்த இந்த எதிர்ப்பைக் காட்டுகிறார்கள். ஆகவே, ஆழ்ந்து எண்ணிப் பார்த்தால் கடவுள் நம்பிக்கை நீங்கினால்தான், இந்த நாட்டு மக்கள் தெளிவு அடைவார்கள் என்ற முடிவுக்குப் பெரியார் அவர்கள் வந்து, அந்த முடிவினை வலியுறுத்தினார்கள்.

தொடக்கத்தில் ஒரு கடவுள் இருக்கிறது என்று சொன்னால், எனக்கொன்றும் மாறுபாடில்லை. அந்தக் கடவுள் மனிதனை ஏமாற்றக்கூடாது. அந்தக் கடவுள் பெயரால் மூடநம்பிக்கையினை வளர்க்கக்கூடாது. அந்தக் கடவுளுக்கு மனைவி, மக்கள் என்று சொல்கிற நிலைமை இருக்கக்கூடாது. அந்தக் கடவுளுக்கு இவ்வளவு பொருள் தேவை; இவ்வளவு செலவழிக்க வேண்டும் என்ற நிலை இருக்கக்கூடாது. அந்த இரண்டடி உள்ள கடவுளை 30 டன் எடையுள்ள பெரிய தேரிலே வைத்து, இழுக்கிற நிலைமை இருக்கக்கூடாது. மூடநம்பிக்கைக்கு இவை எல்லாம் வித்தாக இருக்கிறது. அதனால்தான் கண்டிக்கிறேன் என்று சொன்னவர்தான் பெரியார் அவர்கள். புரோகிதத்தைக் கண்டித்து, வைதீகச் சடங்கு களைக் கண்டித்து, வேத ஆகம வழிபாடு முறைகளைக் கண்டிக்க ஆரம்பித்து, கடைசியாகத்தான் அவர்கள் இவைகளையெல்லாம் சொல்லியும் எண்ண மறுக்கிறார் கள்; புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். கடவுள் நம்பிக்கை அதற்கு இடையூறாக இருக்கிறது. ஆகவே கடவுளே இல்லையென்று இந்த நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொன்னால்தான், இந்த நாட்டு மக்கள் திருந்துவார்கள்

என்ற எண்ணத்திலே அந்த முடிவுக்கு வந்தார்கள். தந்தை பெரியார் அவர்கள் ஒரு தனி மனிதனாக இருந்து எடுத்துரைப்பதைப் பாராட்டலாம் என்றாலும், தனக்கு உண்மை என்று தோன்றுவதைச் சொல்வதில் நிறைவு காண்பவர்கள். அவர் ஒரு இலட்சியவாதிதான். தனக்குத் தோன்றிய உண்மையை உலகத்துக்கு சொல்லிவிட வேண்டும் என்று கருதியவர்தான். ஆனால், பெரும்பான்மை மக்களைத் தன்னுடைய கருத்துக்கு மெல்ல எப்படித் திருப்புவது என்பதை பெரியார் அவர்கள் எண்ணிப் பார்க்கக்கூடிய அந்த நோக்கத்தைப் பெற்றவராக இல்லை. தன் கருத்து, தன் கொள்கை, கேட்டால் கேளுங்கள், கேட்காவிட்டால் விடுங்கள் என்று சொல்லக்கூடிய அந்த மன உறுதியைப் படைத்தவர்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் நம்முடைய இலட்சியம் மக்களிடத்திலே போய்ச் சேரவேண்டுமானால் என்ன முறையில் சொல்வது? என்பதைக் கருதியவர். அவர்கள் மிகச்சிறந்த நாடகங்கள், புதினங்கள் எல்லாம் இயற்றக்கூடிய தகுதி பெற்றவராக இருந்த காரணத்தால் பாத்திரப் படைப்புக்களில் பல்வேறு குணாம்சங்களை உடையவர்களை அவர்கள் படைத்துப் பார்த்து, எப்படிப்பட்ட தத்துவ விளக்கத்தோடு எடுத்துரைத்தால் மக்களுடைய மனத்தை மாற்றுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும், எதை எப்படிச் சொன்னால் அந்த வாய்ப்புக் கிடைக்கும் என்பதை எண்ணிப் பார்த்து, மற்றவர்கள் ஏற்றுக்கொள்கிற வழியறிந்து சொல்கிற முறையை அண்ணா அவர்கள் பின்பற்றினார்கள். இரண்டாவதாக, மேல்நாட்டில் கூடப் படித்தவர்களிடத்திலேகூட நாத்திகந் தான் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை என்று யாரும் சொல்லமுடியாது. பெரியார் அவர்கள் அந்த எல்லைக்குப் போயிருந்தார்.

பொதுமக்களில் ஒரு சாராரிடத்திலே பெரியாரின் அந்த எண்ணம் போய்ச்சேரும். பெரியாரிடத்திலே

இருக்கிற நம்பிக்கை காரணமாக அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். பெரும்பான்மை மக்களைத் திருப்புவது தான் ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு அடிப்படை யானதொன்று. பெரும்பான்மை மக்களைத் திருப்ப வேண்டுமானால், அவர்களுடைய எண்ணங்களிலே படிப்படியாக, மெல்ல மெல்லக் கருத்துக்களைச் சொல்வதன் மூலமாக, சிந்திக்க வைப்பதன் மூலமாக மாற்றத்தை உண்டாக்க வேண்டும் என்று அண்ணா அவர்கள் கருதினார்கள். அதனாலேதான் அண்ணா ஒரே கடவுளை மக்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் எனக்கு மாறுபாடில்லை என்றார். இது ஒரு காலத்திலே பெரியார் சொன்னது. இதை அறிஞர் அண்ணா அவர்கள் இன்னொரு காலத்திலே சொன்னார்கள்: 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று ஏற்கிற நிலைமை வருமானால், எனக்கு அதிலே மாறுபாடில்லை என்று. சமூகம் அப்படியொரு முடிவுக்கு வருமானால், நான் அதிலே மாறுபட்டிருக்கமாட்டேன். சமூகத்தினுடைய நன்மைக்காக நான் அதை ஏற்றுக் கொள்வேன் என்ற கருத்தை அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் இந்த நோக்கத்தில்தான் **கலைஞர்** *அவர்கள், ஒரு படத்திலே சொல்லுகிறபோது* **'கோயில் வேண்டாம் என்று கூறவில்லை, கோயில் கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக்கூடாது'** *என்றுதான் சொல்கிறேன் என்று வசனம் அமைத்துள்ளார்.*

பேட்டி காண்பவர்

என்னுடைய கேள்வி கேட்கப்பட்டதற்கு அடிப்படைக் காரணம் தந்தை பெரியார் அவர்களை விட்டு நீங்கள் விலகி, தனியாக இயக்கம் கண்டபோது, என்றைக்கு அரசியலுக்குப் போய் மக்களிடம் சென்று ஓட்டு வாங்கவேண்டும் என்று ரோட்டிலே நிற்கப் போறீங்களோ, அப்பவே உங்கள் கொள்கைகளை எல்லாம் விட்டுட்டுப் போறதற்கு, எல்லாவிதமான நிலைமைகளும் வந்துவிடும் என்று சொல்ல இடமிருக்கிறது. அதுதான் நடந்திருக்கோ?

பேராசிரியர்

அது தவறு. பெரியார் அவர்கள் அப்பொழுதே ஒரு விளக்கம் சொன்னார்கள். உண்மையாகப் பெரியார் அவர்கள் எந்தக் கொள்கையை மக்களிடத்திலே எடுத்து வைத்தார்களோ அதனைப் பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய பக்குவத்தில் அவரால் சொல்ல முடியவில்லை. அவர்கள் மேற்கொண்ட திருமணம் காரணமாகப் பெரும்பான்மையான மக்களுடைய மனதில் உயர்ந்த மதிப்பீடு மாறிவிடுமோ என்ற அச்சம் அண்ணா அவர்களுக்கு ஏற்பட்டது. அய்யா அவர்களை விட்டு வெளியேறுகிறபோது, ஓரளவுக்குப் பெரும் பான்மைத் தொண்டர்கள் அறிஞர் அண்ணா அவர்கள் பக்கம் இருந்தாலுங்கூட, அதையெல்லாம்கூடக் காட்டிக் கொள்ளாமல், அண்ணா அவர்கள் கண்டனங்கள் என்று கூடச் சொல்ல மனமில்லாமல் **கண்ணீர்த் துளி** என்று சொல்லிக் கொண்டே ஒரு இரங்கத்தக்க வருத்தத்தோடு தான் பெரியாரின் கொள்கையைக் காப்பாற்றவேண்டும் என்ற உணர்வோடுதான் வெளியே வந்தார்கள். அது மட்டுமல்லாமல், தேர்தலுக்கு நிற்கவேண்டிய நோக்கமே, இந்த இயக்கத்திற்கு அப்போது இல்லை.

இந்த இயக்கம் துவங்கியபோது, திராவிடர் கழகம் தொடங்கிய அந்த மாநாட்டிலேயே கலந்து கொண்டவன் நான். அதற்கு முன்னாலே நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டிலேயும் கலந்து கொண்டவன். 1942இல் சிதம்பரத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாடு, சுயமரியாதை மாநாடு, இன்னொன்று நாட்டினுடைய பாதுகாப்பிற்காகப் போர்முனை ஆதரவு மாநாடுகளில் கலந்து கொண்டவன். இந்த மூன்று மாநாடுகளும் 2 நாட்களிலே நடைபெற்றன. ஒன்று தந்தை பெரியார் அவர்களுடைய தலைமையில். இன்னொன்று பட்டி வீரன்பட்டி சவுந்திரபாண்டியன் அவர்கள் தலைமையில். இன்னொன்று அண்ணாமலை பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த சர். கே.வி.ரெட்டி அவர்கள்

தலைமையிலே நடைபெற்றது. அந்த மாநாட்டிலேயும், சவுந்திரபாண்டியன் அவர்களைத் தலைமை வகிக்குமாறு முன்மொழிந்து பேசிய பேச்சாளன். ஆக அன்றைய தினத்திலேயிருந்து உருவாகி வந்த சூழ்நிலைகளை நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்களேயானால் ஒரே கொள்கையை எடுத்துச் சொல்லுகிற முறையில்தான் பெரியார் அவர்களுக்கும், அண்ணா அவர்களுக்கும் சில வேறுபாடு இருந்தது. அண்ணா அவர்கள் பிரிந்து வருகிறபோது இலட்சியம், கொள்கை ஆகியவற்றைக் காப்பாற்றுவதற்கு இதுவே வழி என்றுதான் கருதினாரே தவிர, அந்தக் காலக் கட்டத்தில் தேர்தலில் ஈடுபடும் காலக் கட்டத்தை எண்ணிப் பார்க்கவும் இல்லை; அதனை விரும்பவும் இல்லை.

பேட்டி காண்பவர்

ஒரு முக்கியமான நடைமுறைச் சிக்கலை, கோளாறை அன்றாட வாழ்க்கையில் தனிப்பட்ட வாழ்க்கையில் நானே பார்க்கிறேன். நீங்கள் சொல்லாமல் விட்டு விட்டீர்கள் என்பதற்கு அடையாளம் தி.மு. கழக வேட்டி கட்டிக்கொண்டு இருக்கிறவர், அவர் நெற்றி நிறைய பட்டையா - சந்தனம், விபூதி, குங்குமம் பூசிக்கொண்டு வருகிறார். அந்த தோற்றத்திலே ஒரு முரண்பாடு இல்லையா?

பேராசிரியர்

முரண்பாடு என்று சொல்லமுடியாது. ஏனென்றால் ஒரு அரசியல் கட்சி என்று ஆனதற்குப் பின்னர், பல தரப்பினரும் அந்த கட்சிக்கு வருகிறார்கள். 1957இல் தான் முதன்முதல் தி.மு.க. தேர்தலில் நிற்க நேரிட்டது. ஆனால், முதல் தேர்தலுக்கு நிற்கிறபோது அன்றைக்கு நாங்கள் 15 பேர் வெற்றி பெற்றவர்களாக இருந்தபோது, அத்தனை பேரும் அதில் ஊறியவர்களாக இருந்தோம். அதற்கடுத்து 62 தேர்தல். அதற்கப்புறம் ஆட்சியினைப் பிடித்த 1967 தேர்தல். அதுமட்டுமல்லாமல் பல கட்சியினுடைய கூட்டணியாக இருந்து

செயல்படவேண்டிய காலக்கட்டங்கள் அமைந்தன. ஒரு காலக்கட்டத்தில் மூதறிஞர் இராஜாஜி அவர்களே நமக்கு ஆதரவாக இருந்து தேர்தல் பிரச்சாரம் நடத்தக்கூடிய நிலை. இப்படியெல்லாம் பல கட்டங்கள் மாறிக் கொண்டே வருகிற நிலை.

உண்மையில் ஒரு இயக்கத்தினுடைய வேர் பல நேரங்களில் மண்ணில் மறைவாகத்தான் இருக்கிறது. அதனுடைய அடி மரம், கிளை, தழை, பூ இவைகள்தான் கண்ணுக்குத் தெரிகின்றன. அதைப்போல வேராக இருக்கிற சுயமரியாதை உணர்வு, அடிமரமாக இருக்கிற நீதிக்கட்சி உணர்வு இவையெல்லாம் தெரிந்தவர் களுக்கு, புரிந்தவர்களுக்கு விளங்குமே தவிர, கிளையை, இலையை, பூவைப் பார்த்து இவை நல்ல நிழல் தரக்கூடிய மரம் என்று வந்து தங்குகிற மக்களுக்கோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ அரசியல் கண்ணோட்டத்தில் பார்த்து, நமது இயக்கத்தில் சேருகிறவர்களுக்கோ இந்த அடிப்படை உணர்வுகள் அவ்வளவு ஆழமாகப் பதிவதற்கு வாய்ப்பில்லை.

அதைவிட இன்னும் தெளிவாகச் சொன்னால் 75வயது ஆகிற எனக்கோ, 74 வயதாகிவிட்ட கலைஞருக்கோ, எங்களுக்கு இந்த இயக்கத்திலே இருக்கிற அந்த உணர்வுகள் 60 வயதானவர்களுக்கு, 50 வயதானவர்களுக்கு, 40 வயதானவர்களுக்கு சற்று குறையத்தான் செய்யும். வேண்டுமானால் சிலர் நம்முடைய **இளைஞர்களில் தம்பி ஸ்டாலினைப்போல** அந்த வயதிலேயும் சில பேர் இயக்கத்தினுடைய அடிப்படைக் கொள்கைகளை உணர்ந்தவர்களாக இருப்பது குறித்து இந்த இயக்கத்தில் உள்ளவர்கள் பெருமைப்படலாம். அன்றைக்கு நாங்கள் இந்த இயக்கத்தில் நுழைந்தபோது அடியெடுத்து வைத்தபோது, எங்களுக்குக் கிடைத்த அதே கொள்கைகளின் வண்ணத்தோற்றம் இன்றைக்குக் கிடைக்கமுடியாத நிலைமை எல்லோருக்குமே இருக்கிறது.

பேட்டி காண்பவர்

அவற்றை எல்லாம் அப்படிச் சொல்லத் தவறியிருக்கிறீங்க.

பேராசிரியர்

சொல்லத் தவறுவதுகூட அல்ல. சொல்லவேண்டிய செய்திகள் எத்தனையோ வந்துவிடுகின்றன. உதாரண மாக, ஒருகாலத்தில் சுயமரியாதை இயக்கமாக மட்டுமே இருந்தபோது பார்ப்பனர், வைதீகம், புராணம், இதிகாசம் இவைகளைக் கண்டிப்பது மட்டுமே வேலையாக அமைந்தது. இன்னொரு காலக்கட்டத்திலே இந்தி எதிர்ப்பு இயக்கப் பணியும் வந்தபோது தமிழ்மொழி யினுடைய பெருமை, சிலப்பதிகாரத்தினுடைய சிறப்பு, புறநானூற்றினுடைய அருமை, தொல்காப்பியத்தினுடைய பழமை, திருக்குறளுடைய மாட்சி இவைகளை எல்லாம் மக்களிடம் எடுத்துச் சொல்கிற நிலைமை வருகிற போதும் சுயமரியாதைக் கொள்கை விளக்கம் குறைகிறது.

அதேபோலத் தேர்தல் வருகிறபோது அரிசி விலை உயர்வது, ஆட்சிமுறையிலே ஏற்பட்ட கேடுகள், பொதுமக்களுடைய சனநாயக உரிமை இவைகளை எடுத்துச் சொல்கிற நிலைமை வருகிறபோதும் உடனடியாகச் சில கொள்கைகளை மக்களிடம் சொல்லித் தீரவேண்டிய கடமை ஒரு இயக்கத்திற்கு ஏற்பட்டு விடுகிறபோது, இவைகளிலே முன்னுரிமை ஏற்கனவே இருந்த அந்தக் கருத்து விளக்கங்கள் பெறமுடியவில்லை. இவைகளையெல்லாம் கருதித்தான் பெரியார் அவர்கள், தான் சொல்லக்கூடிய கொள்கையைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருந்தால்போதும் என்ற முடிவோடு தேர்தலில் எனக்குச் சம்பந்தமில்லை. நான் எப்போதும் தேர்தலில் ஈடுபடமாட்டேன் என்று சொன்னார்கள். அவர்கள் அப்படிச் சொல்லமுடியும்? ஆனால் நாட்டில் சனநாயகத்தையும் காப்பாற்றவேண்டும் என்று உணரக் கூடியவர்கள் தந்தை பெரியார் அவர்கள் சொன்னதைப்

போல சொல்லிவிடமுடியாது. காப்பாற்றுவதற்குத் தேவையான ஆற்றலும், பொதுமக்களுடைய ஆதரவும் இளைஞர்களுடைய ஈடுபாடும் மிகுந்து இருக்கிறபோது, சனநாயக முறையில் தி.மு.க.வைத் தவிர இன்னொரு கட்சி அடியெடுத்து வைத்து, காங்கிரசினுடைய எதேச்சாதிகாரத்தினை மாற்றுவதற்கான வல்லமை பெற்றிருக்கவில்லை என்று கண்ணுக்குத் தெரிகிற போது, ஒரு கொள்கையோடு - நெறியோடு நடைபெறுகிற கட்சி தி.மு.க. தான்; அந்தக் கட்சிதான் இந்த நாட்டைக் காப்பாற்றமுடியும் என்று அண்ணா அவர்கள் கருதினார். அந்த நிலை வந்தபோது ஏற்கனவே இருந்த அதே நிலையில், அதே வகையில் ஒரு கட்சி செயல்படுவது என்பது இயலாத காரியம்.

பேட்டி காண்பவர்

தி.மு.க. வின் மையக் கருவாக இருக்கிற சில முக்கியமான கொள்கைகள் உங்களுக்குண்டு. ஆங்கிலத்தில் சொல்வதாக இருந்தால் ‘லிவர்’ மாதிரி என்று சொல்வார்கள். அதிலே தலையானது இந்தி எதிர்ப்பு என்பது. இன்னும் சொல்லப்போனால், அதிலே முளைத்த இயக்கம் இந்த இயக்கம். அந்த இந்தி எதிர்ப்பை நீங்கள் எதிர்க்கட்சியாக இருக்கிறபோது கையைத் தூக்கிக் கொண்டு பேசுகிறீர்கள். வீரமுழக்கமிடுகிறீர்கள்! ஆளுங்கட்சியாக இருந்தால் மௌனமாகிவிடுகிறீர்கள். மறுபடியும் போராட்டக்கத்தியைத் தூக்கித் திருப்பிக்கீழே போட்டுவிடுகிறீர்கள். இது தொன்றுதொட்டு தி.மு.க.விடம் இயல்பாக இருக்கிறது என்பது எனது கடுமையான விமர்சனம்.

பேராசிரியர்

அது கழகத்தின் இயல்பு அல்ல. அதுதான் அறிவுடைமை. ஏன் அறிவுடைமை என்று சொல்கிறேன் என்றால் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்து அமர்ந்து சில திங்கள் கழித்து மறுபடியும் மாணவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தியபோது,

அறிஞர் அண்ணா அவர்கள், அந்த மாணவர்களுக்கு கூறிய அறிவுரை இது. நீங்கள் எங்களைத் தேர்ந்தெடுத்து இந்த ஆட்சிப் பொறுப்புக்குக் கொண்டு வந்திருக் கிறீர்கள். அந்த இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்துகிற பொறுப்பை என்னிடத்திலே விட்டுவிடுங்கள். நீங்கள் உங்கள் கல்வியைக் கவனித்துக் கொள்ளுங்கள். படிக்கச் செல்லுங்கள். நாட்டில் அமைதியைக் காப்பாற்றுங்கள் என்று அறிஞர் அண்ணா அவர்கள் கேட்டுக்கொண் டார்கள்.

அந்த அடிப்படையில் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானமும் கொண்டு வந்து காங்கிரசார் உட்பட எவரும் எதிர்க்க முடியாத நிலைமையில் நிறைவேற்றினார். அந்தத் தீர்மானம் தமிழ்நாட்டில் இனி மாணவர்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளைத் தவிர மூன்றாவது மொழியாக இந்திமொழி படிக்கத் தேவை யில்லை. இதுவரையில் பாடத் திட்டத்தில் இடம் பெற்றிருந்த இந்தி இனி இடம் பெறாது. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகள் மட்டுமே தமிழ்நாட்டு மாணவர்களுக்குக் கல்விக்கூடங்களில், பள்ளிக்கூடங் களில் பயிற்றுவிக்கப்படும். அதேபோல, தேசிய மாணவர் படை என்று சொல்லப்படுகின்ற என்.சி.சி.யில் இந்தியில் ஆணையிடுகிற முறையிருப்பதைக் கைவிட்டு, அவர்கள் ஆங்கிலத்தைப் பயன்படுத்த வேண்டும். இந்தி ஆணைச்சொற்களைக் கைவிடாமல் இருப்பார்களே யானால் நான் இந்திய தேசிய ராணுவ மாணவர் பயிற்சிப் படையையே கலைத்துவிடத் தயங்கமாட்டேன் என்று அறிவித்து அதைத் தீர்மானமாகக் கொண்டு வந்து சட்டமன்றத்திலே அண்ணா அவர்கள் நிறைவேற்றி னார்கள். இதற்கு என்ன பொருள்?

ஒரு ஆட்சி நம்மிடத்திலே இருக்கிறபோது, கிளர்ச்சி என்பதிலே அர்த்தம் இல்லை - கொள்கை உடன் பாடு இருக்குமானால். எனவே மாணவர்கள் நடத்தும் அந்தக் கிளர்ச்சி மட்டுமல்ல, தி.மு.க. மாணவர்கள்

மட்டுமன்றி அனைத்து மாணவர்களும் சேர்ந்து நடத்திய அந்தக் கிளர்ச்சியுங்கூட நாம் ஆட்சியிலே இருக்கிறபோது தேவையில்லை என்று சொன்னால், நாம் ஆட்சியிலே இருந்துகொண்டு, அதே நேரத்தில் போராட்ட உணர்வோடு, பேசுவது என்பதில் அர்த்தமில்லை. அதுமட்டுமல்ல, இந்தி மொழி திணிக்கப்படுவதற்குப் புதிய புதிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு காலக் கட்டத்திலேயும் தி.மு.க. எதிர்த்துப் போராட்டம் நடத்தியிருக்கிறது. சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறது. இன்னும் கடுமையான ஒரு நிலைமை ஏற்பட்டபோது, அரசியல் சட்டப் பிரிவையே கொளுத்திவிட்டு, அது காரணமாக நான் உள்ளிட்டு தி.மு.க. தோழர்கள் சிறைக்குச் சென்றது மட்டுமல்ல அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் **சட்டமன்ற உறுப்பினர் பதவியும் பறிக்கப்பட்டோம்**, சட்டமன்ற எதிர்க்கட்சியாக இருந்தபோது.

இன்று இந்தி திணிக்கப்படுகிறது என்ற நிலையில்லை. ஏற்கனவே உள்ள நிலைமை நீடிக்கிறது என்று சொல்லலாம். ஏற்கனவே உள்ள நிலைமை நீடிக்கிறது என்று சொல்கிறபோது மத்திய அரசு **தமிழுள்ளிட்ட தேசிய மொழிகள் பதினான்கையும் மத்திய ஆட்சிமொழிகளாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.** அதுவரையில் ஆங்கிலத்தை நீடிக்கவேண்டும் என்று நாம் சொல்கிற இந்தக் கொள்கை மத்திய அரசு சார்பாக இன்றுவரை மறுக்கப்படவில்லை. நாம் ஒரு கொள்கையை எடுத்து வைத்து இருக்கிறோம். அவர்கள் ஏற்கனவே உள்ள நிலைமையில் இருக்கிறார்கள். புதிய நிலை எதுவும் உருவாகவில்லை. அப்படிப் புதியநிலை உருவாகி இந்தியைத் திணிப்பதற்கு ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில், அவர்கள் மேற்கொண்ட முறையோ, மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்தபோது அவர் சொன்னமுறையையோ கைகொண்டு செயல்படத் தலைப்படுவார்களேயானால், மத்திய அரசில் இடம்

பெற்றிருக்கிற தி.மு.க. அமைச்சர்கள் நிச்சயமாக எதிர்ப்புக் குரல் எழுப்புவார்கள். நியாயம் பெறுவார்கள்.

356வது பிரிவைப் பயன்படுத்தி எந்த மாநில அரசையும் மைய அரசு கலைக்கக்கூடாது; ஆகவே உத்தரபிரதேச அரசையும் கலைக்கக்கூடாது என்னும் வாதத்தைத் தி.மு.க. சார்பாக முரசொலி மாறன் அவர்கள் எடுத்து வைத்து, அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒரு பக்கம் குடியரசுத் தலைவர் அவர்கள் அந்த மாநிலஅரசைக் கலைப்பதற்கு உடன்படவில்லை, திரும்ப மறுபரிசீலனை (Reconsider) *செய்யுங்கள் என்று தெரிவித்தார்கள். அது ஒரு பக்கம் உண்மை. இன்னொருபக்கம் குடியரசுத் தலைவர் சொன்னதை ஏற்றுக்கொண்டுதான் செயல்படவேண்டும். ஏனென்றால்,* **356வது பிரிவை மைய அரசு பயன்படுத்தக் கூடாது என்று சொல்வதற்குரிய வாதம் முதல்முறையாக இப்போது எடுபட்டு இருக்கிறது.** *எனவே, மைய ஆட்சியிலே பங்கு பெற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் இந்தித் திணிப்பு புதிய வடிவம் பெறுமானால் அதை எதிர்ப்பதற்குத் தயங்காது. அதற்கான எல்லா வாய்ப்பும் பெற்றிருக்கிறது.*

பேட்டி காண்பவர்

அதேபோல மாநில சுயாட்சிக் கொள்கையில், இன்றைக்கு ஐக்கிய முன்னணி அரசியலிலே அங்கம் வகிக்கிற ஒரு முக்கியமான ஒரு இடத்திலே இருக்கின்ற நீங்கள், உங்கள் உயிர்நாடிக் கொள்கையான மாநில சுயாட்சிக் கொள்கைக் காகக் குரல் கொடுத்து, இந்தக் காலக்கட்டத்திலேயே நீங்கள் எல்லா மாநிலங்களுக்கும் தன்னாட்சி வழங்குகிற ஒரு சட்ட வடிவம் கொண்டு வரலாமே?

பேராசிரியர்

நல்ல ஆலோசனை. ஆனால் இதைக் கேட்டுச் செய்பவர்களுக்கு வேண்டிய வல்லமையான சூழ்நிலை இருக்கவேண்டும். இன்றைய மைய அரசு ஒரு பக்கம் காங்கிரஸ் ஆதரவு, இன்னொரு பக்கம் இடதுசாரி

களுடைய ஆதரவு என்று இரண்டு ஆதரவையும் வைத்துக்கொண்டுதான் இன்றையத் தேசிய முன்னணி ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறது. நாம் அதிலே பங்கு பெற்றிருப்பதுகூட அந்த ஆட்சிக்கு வலிவு சேர்ப்பதற் காகத்தான், பதவிக்காக அல்ல. ஏன் இந்த ஆட்சிக்கு வலிவு சேர்க்கவேண்டிய கடமை நமக்கு ஏற்பட்டது என்றால் ஒரு பக்கம் இடதுசாரிகள், இன்னொரு பக்கம் காங்கிரஸ், இன்னொருபக்கம் பி.ஜே.பி. இவர்களில் யாரும் ஆட்சி அமைக்கக்கூடிய வாய்ப்பில்லை என்பதற்காக மட்டுமல்ல.

இவர்களில் யாரையும் விட ஒரு நடுநிலைத் தன்மை வி.பி. சிங் அவர்கள் தலைமையிலிருந்து அந்த அணியைச் சார்ந்தவர்கள் மூலமாக, இந்தத் தேசிய முன்னணி மூலமாக நாட்டுக்குக் கிடைக்கும். ஒரு நடுநிலைமை கிடைக்குமானால், மாநில அரசுகளுடைய குரல் மெல்ல மெல்ல ஓங்கும். மாநிலங்களை மதித்துத் தீரவேண்டிய ஒரு நிலை மத்திய அரசுக்கு ஏற்படும். அப்படி மதித்துத் தருகிற ஒரு நிலைமை ஏற்படுகிறபோது மாநிலஅரசை மைய அரசு அனுசரித்துப் போகுமே தவிர- அரவணைத்துப்போகுமே தவிர அலட்சியப்படுத்த முடியாது. எனவே இந்த நிலையிலே மைய அரசினுடைய போக்கு வளருமானால் மாநில சுயாட்சிக் குரலுக்கு மேலும் மேலும் வலிமை சேரும். ஆந்திராவில் உள்ள முதலமைச்சரோ, வங்காளத்தில் உள்ள முதலமைச்சரோ, ஒரு காலக்கட்டத்தில் கருநாடக முதலமைச்சரோ, கேரள முதலமைச்சரோ, இன்னும் ஒரு காலக்கட்டத்தில் குசராத் முதலமைச்சரோ, பஞ்சாப் முதலமைச்சரோ, அத்தனை பேரும் மாநில சுயாட்சிக்குக் குரல் கொடுக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை உருவாக்கமுடியும்.

மாநில சுயாட்சி இடம் பெறத்தக்க அளவிற்கு உருவாவதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாவதற்கு இன்றைக்கு இருக்கிற அரசு நீடிக்கவேண்டும். இந்த அரசு நீடிக்கவிடாமல் செய்கிற ஒரு சூழ்நிலை உருவாகி

விடாமல் இதைச் சில காலம் காப்பாற்றி நடத்துவோமே யானால் மெல்ல மெல்ல மாநில சுயாட்சி மைய அரசின் பொறுப்பில் உள்ளவர்கள் வாயிலிருந்தே ஒலிக்கக்கூடிய நல்ல நிலைமையை ஏற்படுத்தமுடியும். எனக்கு இதில் முழு நம்பிக்கை இருக்கிறது.

1971, 72, 73ஆம் ஆண்டுகளில் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, மாநில சுயாட்சிக் கொள்கையை நிறைவேற்றவேண்டும் - அறிஞர் அண்ணா வழியில் அயராது நடைபோடுவதற்கு அதுதான் வழியென்று அவர்கள் மேற்கொண்டபோது, அதற்காக ஜஸ்டிஸ் ராஜமன்னார் தலைமையிலே குழு அமைத்து, அது குறித்து விரிவானஆய்வு நடத்தப்பட்டு மிகப் பெரிய ஆய்வு ஏடாக அவர்களால் தரப்பட்டு அது தி.மு.க. முன்னணித் தோழர்களால் முழு அளவுக்கு ஆய்வு செய்யப்பட்டு சட்டமன்றத்தில் 1974ஆம் ஆண்டு முதன்முதலாக மாநிலசுயாட்சிக்கான தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டு அப்போது தில்லியிலே இருந்த இந்திராகாந்தி அரசுக்கு இந்தத் தீர்மானம் அனுப்பிவைக்கப்பட்டு, அதை அவர்கள் பரிசீலிக்கும் படியாகக் கேட்டுக்கொண்டு திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லி, ஆனால் இவற்றையெல்லாம் அப்போது கேட்டுக்கொள்வது என்ற அளவில் நின்று போய் இருந்தாலும் அவர்களே சர்க்காரியா கமிஷன் ஏற்படுத்தி, அதன் மூலமாக மைய மாநில அரசுகளுடைய அதிகாரங்களை எந்தெந்த வழியில் சீர்த்திருத்தி அமைக்கலாம் என்ற வழியில் ஆலோசனை கேட்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. இன்றைக்கு, மாநிலசுயாட்சி என்பது வெறுக்கத்தக்க அல்லது கைவிடவேண்டிய ஒரு கொள்கையாக அகில இந்திய அளவில் கருதப்பட வில்லை. மெல்லமெல்ல மாநில சுயாட்சிக்கொள்கை உரம்பெற்று வருகிறது. தக்க சூழ்நிலை மைய அரசிலே உருவாகுகிறபோது, அரசு தன்னைத் தானே நிலை நிறுத்திக் கொள்கிற நிலைமை ஏற்படுகிறபோது தான்

அரசியல் சட்டத்தைத் திருத்துகிற வல்லமை ஏற்படும். திருத்தக்கூடிய வல்லமை உருவாகிற காலக்கட்டத்தில் மாநில சுயாட்சிக்கான குரல் மென்மேலும் வலுப்பெற்று நிச்சயமாக வெற்றிபெறும். ஒவ்வொரு கட்டமாக நாம் முன்னேறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

பேட்டி காண்பவர்

தன்னைத்தானே நிலைநிறுத்திக்கொண்டு தாக்குப் பிடிக்கிற அளவுக்கு என்று சொல்கிறீர்கள். அதுவரைக்கும் இந்த மைய அரசு தாங்குமா என்று ?

பேராசிரியர்

இந்த மைய அரசு இல்லாவிட்டாலும், எந்த மைய அரசு வந்தாலும் இந்த மாநில அரசை மதித்துத் தீரவேண்டிய காலந்தான் எதிர்காலம்.

பேட்டி காண்பவர்

அப்படியென்றால் இதே பதிலைத்தான் காவிரி பிரச்னைக்கும் சொல்லப் போகிறீர்களா?

பேராசிரியர்

காவிரிப் பிரச்சினையில் நாம் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறோம். எந்த அளவுக்கு வெற்றிபெற்றிருக் கிறோம் என்றால், மத்திய அரசு, ஒரு நடுவர் மன்றத்தை ஏற்படுத்தவே முன் வராத ஒரு சூழ்நிலை காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில். பிரதமராக வி.பி.சிங் அவர்கள் இருந்த காலத்தில் நடுவர் மன்றத்தினுடைய கட்டாயமான தேவையைக் கலைஞர் அவர்கள் சொன்னபோது உடனே ஏற்றுக்கொண்டு, நடுவர் மன்றத்திற்கு தகுதியான ஒருவரைத் தலைவராக நியமித்தது. நடுவர் மன்றத்தைப் பற்றி சில அதிகாரவரம்புகள் குறித்து ஐயுறவு ஏற்பட்டபோது, உச்ச நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து நடுவர் மன்றத்திற்கு இன்னென்ன அதிகாரங்கள் உண்டு என்பதையும் அறிவிக்கச் செய்து, அந்த நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பு ஒன்றும் வழங்கி, அந்தத் தீர்ப்பு

இன்றைக்கு மைய அரசிலே இருக்கிறது. இடைக்காலத் தீர்ப்பை, இறுதித்தீர்ப்பு வருவதற்குக் காத்திராமல் உடனே நிறைவேற்றவேண்டும் என்று நாம் கேட்டிருக்கிறோம். நடுவர்மன்றத்தினுடைய தீர்ப்புக்கு மாறான கருத்து மைய அரசிடத்திலே இல்லை. அதை செயல்படுத்துவதற்கான வழி-வாய்ப்பு அவைகளைத்தான் மைய அரசு கருதிக்கொண்டு இருப்பதாக நான் உணருகிறேன். அதிலே மைய அரசில் யார் இடம் பெற்றிருந்தாலும், கருநாடக அரசின் செல்வாக்கு ஓரளவுக்கு இருந்தாலுங் கூடச் சட்டப்படி நிறைவேற்றவேண்டிய ஒரு கடமை அவர்களுக்கு இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந் திருக்கிறார்கள். தக்க அரசியல் சூழ்நிலை வருகிறபோது நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன். இப்பொழு துள்ள நிலையில் இன்றைக்கு உடனடியாக நடுவர்மன்றத் தீர்ப்பின்படிச் செயற்படுமாறு சொல்லவேண்டிய கட்டாயமான நிலைமை தமிழகத்தில் இல்லை.

பேட்டி காண்பவர்

திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம், இதனுடைய பல்வேறுபட்ட நோக்கங்களுக்கிடையில், தாய்மொழியில் கல்வி, எதிலும் எங்கும் தமிழ் இடம் பெறச் செய்வது என்பதனை முக்கியமான குறிக்கோளாகக்கொண்டு, நடைபோட்டுகொண்டு வந்து இருக்கிறீர்கள். மேடையில் சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு இருக்கிற நிலைமையைப் பார்த்தால், உங்க காலத்திலே இருந்த தமிழ்ப்பற்று காரணமாக இராமையா என்ற பெயரை அன்பழகன் என்று சூடிக்கொண்டீர்கள். நாராயணசாமி என்ற பெயரை நெடுஞ்செழியன் என்று சூடிக்கொள்கிற நிலைமையும் இருந்தது. இப்போது எங்கு பார்த்தாலும் மம்மி, டாடி கலாச்சாராமாக வந்திருக்கிறது. இதெல்லாம் பார்க்கிறபோது நீங்கள் வெற்றிபெற்றதாக நினைக்கிறீர்களா?

பேராசிரியர்

கொள்கை தவறல்ல. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பது நிரந்தரமான கொள்கை. நிலைநாட்டப்

படவேண்டிய கொள்கை. சமுதாயச் சீர்கேடுகள் என்பவற்றை ஒரு அரசாங்கத்தால் உடனடியாக மாற்றிவிட முடியாது. சாதியை நம்பாத கட்சி தி.மு.க. மதவேறுபாடு அடிப்படையில் மக்களை அணுகாத கட்சி தி.மு.க. இன்னும் ஒருபடி மேலே போய்ச் சொன்னால், பணக்காரன், ஏழை என்று வேறுபடுத்தும் நிலை இருக்கக்கூடாது என்பதை ஏற்றுக்கொண்ட கட்சி தி.மு.க. இவைகளெல்லாம் கொள்கையாக எண்ண ஓட்டத்திலே இருக்கிறது. இவை மக்களிடத்திலே ஓர் அளவுக்குத்தான் பரவியிருக்கிறது. முழு அளவுக்கு ஏற்கப்படவில்லை. அதேபோலத் தாய்மொழிப் பற்று என்பது எல்லா மக்களிடத்திலும் இயல்பாக அரும்ப முடியாத அளவுக்கு அவர்களுடைய சூழ்நிலையின் தாக்கம் இருக்கிறது.

தமிழ்மொழியிடத்திலே நான் பற்று வைத்திருக்கிறேன். ஒரு புலவர் பற்று வைத்திருக்கிறார். ஒரு கல்லூரி மாணவர் பற்று வைத்திருக்கிறார் என்று சொல்வதைப் போல எல்லா மக்களுடைய நிலையும் இல்லை. தமிழை அவர்கள் வெறுக்கவில்லை. தமிழை அவர்கள் பயன்படுத்தக்கூடாது என்றோ கருதவில்லை. தங்களுடைய பிள்ளைகள் வருங்காலத்தில் பிழைப்பதற்காக என்று எண்ணுகின்றனர். கழைக்கூத்தாடி, தன்னுடைய பிள்ளையை ஒரு கயிற்றிலே கட்டி 30 அடி அளவுக்குச் சுற்றுகிறான். கழைக்கூத்தாடிப் பிழைப்பு அவன் பிள்ளையைக் கயிற்றில் கட்டிச்சுற்றுவது, அதைப்போலத் தங்கள் பிள்ளைகள் பிழைக்கவேண்டுமானால், இந்த நிலையில் ஆங்கிலம் படித்தால்தான் பிழைக்கமுடியும் என்று நம்புகின்றனர். ஒரு தவறான சூழலில் அல்லது அவர்களுடைய சூழ்நிலையில் அது தவிர வேறு எதையும் எண்ணிப் பார்க்கமுடியாத நிலையில் இருக்கிற காரணத்தால் அப்படி ஆங்கிலத்தை மதிக்கிறார்கள்.

பேட்டி காண்பவர்

செல்வி ஜெயலலிதாவினுடைய ஆட்சியை மிகப் பெரிய பிரளயம் என்று கூடச் சொல்லலாம். மகத்தான மக்கள்

பிரளயம் ஏற்பட்டு, அப்புறம் அகற்றி விட்டு உங்களுக்கு ஆட்சியைக் கொடுத்தாங்க. செல்வி ஜெயலலிதா நடத்தின ஆட்சிக்கும், நீங்க நடத்துகிற இந்த ஆட்சிக்கும் என்ன பெரிய வேறுபாடு என்று சொல்ல முடியுமா?

பேராசிரியர்

செல்வி ஜெயலலிதா ஆட்சியே நடத்தவில்லை. அது நடந்த முறைக்கு உள்ள பெயரை நான் சொன்னால் அது அவ்வளவு நன்றாக இருக்காது. அது முறையான ஆட்சி இல்லை. சட்டமன்றத்திலே எதிர்க்கட்சிகள் தாங்கள் முறையாக எடுத்து வைக்கிற கருத்துக்களை எடுத்து வைத்து, ஆளுங்கட்சியினுடைய பதிலைப் பெறக்கூடிய நிலைமை இல்லாமல்தான் கடந்த ஐந்து ஆண்டுகள் நடைபெற்றது. எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல. ஆளுங்கட்சிச் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட அச்சுறுத்தலுக்கு ஆளானார்கள். தாக்குதலுக்கு ஆளானார்கள். பத்திரிக்கை நிருபர்கள், பத்திரிக்கை ஆசிரியர்களே தாக்கப்பட்டார்கள். ஒரு பத்திரிக்கை யினுடைய ஆசிரியர் சட்டமன்ற வளாகத்திலே, சட்ட மன்றத்திலே கூண்டிலேகூட நிறுத்தப்பட்டு விசாரிக்கப் பட்டார். ஆக அந்த ஆட்சியிலே சனநாயகம் என்ற அடிப்படையே இல்லை.

எதிர்க்கட்சிகளை மதிப்பது தான் சனநாயகத்தின் முதல்அடிப்படை. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று அண்ணா அவர்கள் பொதுவாகச் சொன்ன கருத்து சனநாயகத்திலே மிகுந்த முக்கியத்து வம் உடையது. சனநாயகம் என்று சொன்னாலே சனங்களுடைய தலைமை - மக்களுடைய தலைமை என்று பொருள். மக்களுடைய தலைமை மக்களுடைய எந்தெந்தச் சார்புடைய பிரதிநிதிகளாக இருந்தாலும் அவர்களுடைய எண்ணங்கள் எல்லாம் சேர்ந்து கலந்து தகுந்த முடிவுகள் எடுக்கப்படவேண்டும். ஆக அந்தக் கருத்துக்களைச் சொல்லவாவது வாய்ப்பு

அளிக்கவேண்டும். அந்த வாய்ப்பே கடந்த கால ஆட்சியில் 5 ஆண்டுக் காலம் இல்லை என்பது ஒன்று. இரண்டாவது மக்களை மதிக்காத ஆட்சி. மக்களை மிகக் கேவலமாக, சாதாரண ஏவலர்களாக நினைத்தார்கள். மந்திரிகளே ஏவலர்களாக இருந்தார்கள். இன்னும் சொல்லப்போனால் மாற்றுக் கட்சித் தலைவர்களை எல்லாம் மிக இழிவாக நினைக்காவிட்டாலுங் கூடப் புறக்கணித்தார்கள்.

அந்த ஆட்சியிலே சட்டத்திற்குக் கட்டுப்பட அவசியம் இல்லை என்ற எண்ணம் தொடக்கத்திலே இருந்து வளர்ந்தது. தில்லியிலே இருக்கக்கூடிய அரசைத் தன்னுடைய கையிலே வைத்துக்கொண்டால், தனக்குச் சாதகமாக இருக்கக்கூடிய நிலைமையை உருவாக்கிக் கொண்டால், தான் எதைச் செய்தாலும் தன் ஆட்சியை யாரும் கலைக்கமாட்டார்கள் என்ற கண்ணோட்டம். அது ஒரு மனப்பான்மையாயிற்று. அதனுடைய விளைவு முறையாகச் செய்யவேண்டிய காரியங்கள் செய்யப் படாமல் முறைகேடாகச் செய்யப்படுகிற காரியங்கள்தான் தொடர்ந்து ஐந்து ஆண்டுக் காலம் நடைபெற்றது. அதை விளக்கிச் சொல்ல வேண்டுமானால் தனியாக ஒரு சொற்பொழிவு ஆற்றவேண்டுமே தவிர, இந்த உரை யாடலிலே அதை விளக்கிச் சொல்லமுடியாது. **முறைகேடுகளின் உறைவிடமாக இருந்தது கடந்த ஐந்து ஆண்டு காலஆட்சி.**

அதற்கு மாறாகக் கலைஞர் ஆட்சி பொறுப்பேற்ற இந்தக் காலக் கட்டத்தில் நடைபெறுவதையும் கடந்த காலத்திலே நடைபெற்றதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். என்றைக்கும், எதிர்க்கட்சிகளுக்கு மதிப்பளித்து அவர்கள் கருத்துக்களுக்குப் பதில் சொல்கிற முறையைக் கலைஞர், சட்டமன்றத்தில் ஆளுங்கட்சியாக வந்த அந்தக் காலத்திலேயிருந்து தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார். அது அறிஞர் அண்ணா காட்டிய பாதை. இரண்டாவது சட்டமன்றத்தை விவாதிக்கக்கூடிய மன்றமாக, கருத்துக்களைப்

பேசக்கூடிய மன்றமாக, விளக்கங்கள் சொல்லக்கூடிய மன்றமாகச் சட்டமன்றத்தை ஆக்கிக் கொள்ளவேண்டும் என்பது கலைஞருடைய விழைவு. ஆக சட்டமன்றத்திலே அதிக நேரம் அமர்ந்திருந்து விவாதிப்பார். அதிகமான விளக்கங்களை எடுத்துச் சொல்வார். அதேபோல எதிர்க் கட்சிகள் சொல்லக்கூடிய குற்றச்சாட்டுக்களை அது குற்றச்சாட்டு உண்மை போலத் தோன்றுமானால் உடனே அதைப் பரிசீலிப்பார். அந்தக் குற்றச்சாட்டிற்கு உரிய பிரச்சினையில் தகுந்த நடவடிக்கையை அரசு சார்பாக எடுப்பார். அப்படிப்பட்ட செயற்பாடு கடந்த ஐந்து ஆண்டு காலத்திலே கிடையாது. இவைகள் எல்லாவற்றையும்விட சாதனைகள் எதுவும் கடந்த 5 ஆண்டுக் காலத்தில் நடைபெறவில்லை.

இப்போது இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் கலைஞருடைய ஆட்சியின் சாதனைகள் பல துறையி லேயும் நிறைவேறியுள்ளது. மின்சாரம் வழங்கப்படுகிற இடத்திலிருந்து, ஏழைகள் குடிசை போடுகிற இடத்திலிருந்து, நிலவரியிலிருந்து, விற்பனை வரியி லிருந்து, பள்ளி மாணவர்களுக்குத் தரவேண்டிய உதவிகளில் இருந்து, கிராமப்புற மாணவர்களுக்கு கல்வியில் தகுந்த ஊக்கம் காண வழிகாண்பதிலிருந்து, பொறியியல் கல்லூரிகளில் ஒரே வழி நுழைவு முறை அமைப்பிலிருந்து பல துறையில் பல சாதனைகளைக் கலைஞர் நிறைவேற்றியிருக்கிறார். அதையும் நான் விளக்கி உரைத்திடத் தனி நேரம் தேவை. எனவே தான் அந்த ஆட்சியோடு இந்த ஆட்சியை ஒப்பிடவேண்டிய அவசியமே இல்லை. இது ஆட்சி! அது காட்சி.

பேட்டி காண்பவர்

செல்வி ஜெயலலிதா அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்தை ஒப்பிட்டுச் சொல்லும்போது இன்று மிக மோசமான நிலைமையில் சட்டம், ஒழுங்கு கெட்டுப்போய் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள், மக்கள் தனக்கு ஒரு நல்ல தீர்ப்பு

தரப்போகிறார்கள் என்று எங்கு போனாலும் பேசிக்கொண்டு வருகிறார்களே அது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

பேராசிரியர்

நாட்டில் சில இடங்களில் நடைபெறுகிற வன்முறை களையோ, அல்லது கொள்ளையையோ, கொலை யையோ கொண்டு சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று முடிவு சொல்வதற்கு ஆளாகக்கூடாது. சட்டம், ஒழுங்கு கெடுவது என்பது குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் அக்கறை இல்லாமலோ, நடவடிக்கை எடுக்காமலோ, இவர்களைக் கைது செய்ய இயலாமலோ இருந்தால்தான் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது எனலாம். கொலைகாரர் களை அடுத்த 24 மணி நேரத்தில் பிடிக்கிறார்கள். மிகப்பெரிய ரௌடிகளை எதிர்த்துப் போராடி சுட்டுக் கொன்றிருக்கிறார்கள் நம்முடைய காவல்துறையினர். குற்றவாளிகள் முன்னாள் அமைச்சர்களாக இருந்தாலுங் கூடக் கூண்டிலே ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கை இன்றைக்குத்தான் நாம் அதிகம் எடுத்திருக்கிறோம்.

நாட்டிலே உள்ள செய்திகளில் அங்கங்கே உள்ள சூழலால் சில இடங்களில் வன்முறைகள், சில கலவரங்கள் போன்ற நிலைமைகள் ஏற்பட்டன என்று சொன்னால் இது நம்முடைய ஆட்சியின் மீது உள்ள குற்றத்தால் அல்ல. சமூகம் கெட்டுப் போயிருப்பதால் தான் அந்த விளைவுகளைச் சந்திக்க நேரிடுகிறது. இந்த ஆட்சி தொடர்ந்து இன்றைய காவல்துறை மேலும் சீர்ப்படுத்தப் படுமானால் இவை குறையும். அதற்காகத் திட்டமிட்டுச் செயல்படுத்துகிறோம். அப்படிச் செயற்படுமானால் இன்றைக்கு நடக்கிற வன்முறைகள்கூட நிச்சயமாக எதிர்காலத்திலே ஒடுக்கப்படும். வன்முறையிலே ஈடுபடுபவர்கள் கடுமையான தண்டனைக்கு ஆளா வார்கள் என்பது நிச்சயமாகத் தெரியுமானால் ஈடுபடுபவர்கள்; தாங்களே விலகிக் கொள்வார்கள்.

கொள்ளைக்காரர்கள் பிடிபடுகிறார்கள்; தண்டிக்கப்படு கிறார்கள் என்று தெரியுமானால் கொள்ளைக்காரர்கள் அந்த அக்கிரமத்தை நிறுத்துகிறார்கள், அந்தச் செயலில் ஈடுபடத் தயங்குகிறார்கள் அல்லது வேறு மாநிலத்திற்குப் போகிறார்கள். காவல்நிலையத்தில் பெண்கள் கற்பழிக்கப்பட்ட நிகழ்ச்சிக்காக 4 இடங்களில் தண்டனை கிடைக்குமானால் அதற்குப் பின்னர் காவல்துறையில் உள்ளவர்களுள் தவறான போக்கு உள்ளவர்கள்கூட அச்சப்பட்டு அடங்குகிறார்கள். சாமியார்களில் பிரேமானந்தா சாமியார் போல அக்கிரமம் செய்தவர்கள் 20ஆண்டு 30 ஆண்டு தண்டிக்கப்பட்ட செய்தியைக் கேட்டால், ஒன்றிரண்டு சாமியார்கள்கூடத் தாடியை எடுத்துவிட்டு வேறு வேலைக்குப் போகிறார்கள்.

ஆக, நாம் எடுக்கிற நடவடிக்கைகளால் எதிர் காலத்திலே சட்டம் ஒழுங்கை மேலும் சீராகக் காப்பாற்ற முடியும் என்பதிலே எனக்கு எந்த ஐயமுமில்லை. ஆனால் ஏற்கனவே சீர்கேடு ஏற்பட்டுவிட்ட காரணத்தால் உளைச் சேற்றிலே காலை வைத்துள்ளவர்கள் வேகமாக நடக்க முடியாததுபோலக் கடந்த ஆட்சியிலே ஏற்பட்ட உளைச் சேற்றில் மெதுவாகக் கால் ஊன்றிக் கரை சேர்க்க வேண்டிய காலகட்டத்தில் கலைஞர் இறங்கியிருக்கிற காரணத்தால், கரை ஏறுவதற்குச் சற்றுத் தாமதமானாலும் கடந்த கால ஆட்சியினுடைய விளைவுகளை மக்கள் புரிந்து கொள்கிற போது, இந்தக் காலகட்டத்தில் நடைபெறுகிற ஆட்சியினாலே நிச்சயமாகத் தகுந்த மாற்றம் ஏற்படும் என்பது என்னுடைய நம்பிக்கை.

பேட்டி காண்பவர்

சந்தனக்கடத்தல் வீரப்பனாலே 500 கோடிக்கும் மேல் அவனாலே நஷ்டம் ஏற்பட்டு இருக்கு. சமுதாயத்துக்கு மிகப்பெரிய தீங்கு செய்த பெரிய கொள்ளைக்காரன். அவனைக் கைது செய்ய சட்டப்படி உரிய நடவடிக்கை செல்வி ஜெயலலிதா காலத்திலே அதிரடிப்படையைக் காட்டுக்குள்

அனுப்பி அவனைப் பிடிப்பதற்கு மிகப் பெரிய அளவில் முயற்சி செய்யப்பட்டது. ஆனால் இன்றைய முதலமைச்சரோ அவனிடம் தாஜா செய்து கெஞ்சித் தூது அனுப்பிக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்ல; வீரப்பனுடன் அவர் நடத்துகிற நாடகம் என்று ஜெயலலிதா சொல்கிறார். அதைப் பற்றி.....

பேராசிரியர்

ஒன்று, கலைஞர் மட்டுமே முடிவு எடுத்துச் செய்கிற காரியமாக வீரப்பனைப்பற்றி முடிவு எடுக்கிற நிலையில் வீரப்பன் விவகாரம் அமைந்திருக்கவில்லை. கருநாடக அரசுக்கும் தமிழக அரசுக்கும், இரண்டு அரசுக்கும் சேர்ந்த தொடர்புடைய ஒரு காரியமாக அது ஆகிவிட்டது. வீரப்பனே கூடத் தமிழ்நாட்டுக் காட்டிலே இருந்தாலும் இருக்கலாம். கருநாடகக் காட்டிலே இருந்தாலும் இருக்கலாம். கருநாடக அரசுக்கும் தமிழக அரசுக்கும் ஆக இரண்டு அரசுக்கும் தொடர்புடைய ஒரு காரியத்தில் இரண்டு முதலமைச்சர்களும், இரண்டு அரசாங்க அதிகாரிகளையும் வைத்துக் கொண்டு கலந்து பேசி முடிவு எடுக்கும்போது, எந்த முதலமைச்சரும் நாடகமாட முடியாது. கடந்த காலத்திலே முதலமைச்சராக ஜெயலலிதா இருந்தபோது செய்தவை இன்னொரு அரசாங்க முதலமைச்சரைக் கலந்து பேசி எடுத்த முடிவல்ல. தனியாக எடுத்த நடவடிக்கை. அது வேண்டு மானால் நாடகமாக இருக்கலாமே தவிர, இது நாடகமாக இருக்க முடியாது. நாடகமாக நடத்தவும் முடியாது.

மேலும் எடுக்கப்பட்ட நடவடிக்கையில் வீரப்பனால் கைப்பற்றிச் செல்லப்பட்ட பன்னிரண்டு பேரும் விடுவிக்கப்பட்டார்கள். இப்பொழுதும் அவனால் கடத்திச் செல்லப்பட்ட ஐந்து - ஆறு பேரும் விடுவிக்கப்பட்டார்கள். நாம் எடுக்கிற நடவடிக்கையிலேகூட அரசின் முதல் கோரிக்கை இவர்களை விடுவிக்கவேண்டும் என்பது. இவர்களை விடுவிக்கவேண்டுமானால் அவன் சரணடைவதாகச் சொன்ன அந்த முறையிலேதான்

அவர்களை விடுவிக்கச்செய்ய முடியுமே தவிர, உன்னை நாங்கள் சுட்டுக் கொல்வோம், நீ அவர்களை விட்டுவிடு என்று சொல்கிற வாதம் எடுபடாது. ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே சில காவல் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் அவனால் கடத்திச் செல்லப்பட்டபோது, வீரப்பனிடத்திலே கலெக்டர் மூலமாகச் சமரசம் பேசி, இன்னும் சொல்லப்போனால் அவன் பணம் கேட்டுக் கொடுத்தார்களா இல்லையா? நான் ஆதாரத்தோடு சொல்லமுடியாது. ஆனால் சமாதானம் பேசி அவர்களை விடுவித்தார்கள். ஆகவே அவர்களுக்குப் பொருத்தமான முறை இன்றைக்கு இருக்கிற கலைஞருக்கோ, அல்லது கருநாடகத்திலே உள்ள பட்டீலுக்கோ பொருந்தாது என்று சொல்ல முடியாது. ஆகவே இங்கு நடைபெறுவது நாடகமல்ல.

இன்னும் ஒன்று, கடந்த கால ஆட்சியிலே மிகப்பெரிய வீர தீரம் பேசிய தேவாரம் என்ற போலீஸ் அதிகாரி, தான் போய் எப்படியும் அவனைக் கைது செய்துவிடுவேன், இல்லையானால் சுட்டுவிடுவேன் என்று சொல்லிவிட்டுச் சென்றும் கடைசி வரையில் தேவாரம் தோல்வி அடைந்தாரே தவிர, வெற்றியடைய வில்லை. அவ்வளவு மிடுக்காகப் போன அந்த போலீஸ் அதிகாரி தேவாரத்தைத் தனிப்பட்ட முறையில் நான் குற்றம் சாட்ட விரும்பவில்லை. குறை சொல்ல விரும்ப வில்லை. அவராலும் அவ்வளவுதான் முடிந்தது. தேவாரம் திருவாசகம் பாடியும் இவ்வளவுதான் நடந்தது. ஜெயலலிதா ஆட்சியில் அதற்கென்று அனுப்பப்பட்ட அதிகாரியே கூட வெற்றி பெற முடியவில்லை. இன்னும் ஒரு படி மேலாக வீரப்பன் கை தான் அன்று ஓங்கி யிருந்தது. அரசினுடைய கை ஓங்கவில்லை. அதுபோல ஒரு இக்கட்டான நிலைமை வருகிறபோது கடத்திக் கொண்டு போனவர்களை விடுவிப்பதில் அக்கறை காட்டுவதால் வீரப்பனை ஒழித்துவிடுவோம் என்று பேசுகிற வீராப்பிலே நாம் எப்படி முக்கியத்துவம் காட்டுவது? கடத்தப்பட்டவரை விடுவிப்பதில் அக்கறை

காட்டத்தான் வேண்டும். அதைத்தான் செய்தார்கள். அதைத்தான் நக்கீரன் கோபால் செய்தார். அந்தக் காரியத்தில் எவராயினும் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படித்தான் கருநாடக அரசும், தமிழக அரசும் நடந்து கொண்டன.

அதற்கு மேல் சரண் அடைவதாக ஒரு எண்ணத்தை நம்மிடத்திலே ஏற்படுத்தி விட்டு, சரண் அடையத் தயங்குகிற ஒரு நிலையிலே வீரப்பன் காட்டில் இருக்கிறான். அவனுக்கு நாட்டிலே இருக்கிற பல்வேறு மக்களோடு நேரிடையான தொடர்பு வைத்து ஆலோசனை நடத்தக்கூடிய வாய்ப்புக் கிடையாது. ஆகவே அவன் சிந்தித்துத் தன் நண்பர்களோடு பேசி சரண் அடைய முன்வராத அந்த நிலைமையில் இருக்கிறபோது, கடைசிவரையில் சரணடையச் சொல்லிக் கேட்பதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் நம்முடைய காவல் படை வெற்றி பெறவேண்டும் என்று நாம் பேசலாம். வெற்றி பெற்று வருகிற வரை நாம் காத்திருக்க வேண்டும். ஆகவே இதில் எந்த நாடகமும் இல்லை. இதை நான் உண்மையான ராஜதந்திரம் என்று கூடச் சொல்லமாட்டேன். (Practical approach) நடைமுறை சாத்தியமானது. இதைத் தவிர வேறு எதுவும் கிடையாது.

ஆகவே அந்த வகையிலே கலைஞர் அவர்கள் கருநாடக மாநில முதலமைச்சரோடு கலந்து, அவரும் தமிழக முதலமைச்சருடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்டு, திட்டமிட்ட முறையில் இவ்வளவுதான் செய்ய முடியும். இதற்கு மேலே யாரும் செய்யமுடியாது என்ற அளவுக்குத் தகுந்த முறையிலேதான் வீரப்பன் அணுகப் பட்டுள்ளான். பின்னர் அவன் சரண் அடையட்டும். இல்லையானால் சட்டத்தின்படி நம்முடைய காவல்துறை யினருக்கோ ராணுவத்திற்கோ, அவனை எந்த வகையில் கொண்டு வருகிற வாய்ப்பு இருக்கிறதோ அப்படிக் கொண்டு வரட்டும் என்ற முறையிலே எடுத்து இருக்கிற இந்த நடவடிக்கையில் எந்தக் குறைபாடும் இல்லை.

பேட்டி காண்பவர்

காட்டிலேயிருந்து அவன் அனுப்பியிருக்கிற கேசட்டைக் கூரியரிலிருந்து வந்தது என்று நக்கீரன் கோபால் சொல்லியிருக்கிறார். அதையும் இந்த முதலமைச்சர் வாங்கி, நாட்டுமக்களுக்குச் சொல்லலாமா? எங்கே இருந்தாலும் காட்டிலேயிருந்து கூரியர் தபால் வருமா? இவர் 'காதிலே பூ சுத்தியிருக்காங்க' என்று சொல்கிறார்களே என்ற விமர்சனம் குறித்து - இங்கிருந்தே போட்டிருக்கலாம் அல்லவா?

பேராசிரியர்

அவன் உள்நாட்டில் இருக்கிற கருநாடகாவில் இருக்கிறவர்களைக் கடத்தல் செய்து கொண்டு போறான், சிறைப்படுத்தி அழைத்துப் போறான். அப்படிப்பட்ட திறமையுள்ளவன் ஒரு ஆளை அனுப்பி கூரியரிலே போடமுடியாதா? இது ஒன்றும் ஒரு பெரிய பிரச்சினை அல்ல. சொல்லப்பட்ட கருத்துக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் கொண்டு வந்து கொடுக்கிறவர் தபால் வந்ததாகச் சொல்லிக் கொடுத்துப் போகிறார். தபாலில் வந்தது உண்மையல்ல என்று தெரிந்தால்தான் அதைப் பற்றி எல்லாம் கருதலாம் நாம். அந்த நாள் முதலமைச்சர் வார்த்தைக்கு அவ்வளவு மதிப்புக் கொடுத்து, பதில் சொல்லவேண்டிய கடமை எனக்கு இல்லை.

பேட்டி காண்பவர்

அவர் கருத்துக்கு மதிப்பு கொடுக்கமாட்டேன் என்று சொன்னால்கூட நான் கேட்கிறேன். மதுராந்தகம் பகுதியிலே அரசினர் விருந்தினர் மாளிகையைப் பல இலட்சம் ரூபாய் செலவுசெய்து புதுப்பித்துச் சந்தனக்கட்டைக் கொள்ளைக் காரனைத் தங்க வைக்கப் போகிறார்கள்.முன்னாள் முதலமைச்சரான என்னைக் கொசுக்கடியில் கொண்டு போய்ப் போட்டார்கள், அப்படீன்னு சொல்லியிருக்காங்க?

பேராசிரியர்

இதனை இரண்டு, மூன்று விதத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். பல இலட்ச ரூபாய் செலவிலே இல்லை, அந்தக் கட்டிடத்திலே நான் போய் தங்கியிருக் கிறேன் 20 ஆண்டுகளுக்கு முன்னாலே. அது பழுது பட்டிருந்தது. அந்தப்பழுது காரணமாகப் பயன்படாமல் இருந்தது. அதை இப்போது பழுது பார்க்கிறாங்க. யாருக்காகப் பழுது பார்க்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடியாது. யாருக்காகவும் இருக்கலாம் அல்லது பயணிகள் விடுதியாகவும் பயன்படுத்தலாம். பயணிகள் விடுதியாகப் பயன்படுத்தமுடியாது என்று எவரும் சொல்லமுடியாது. எல்லாவற்றையும்விட இந்த அம்மையார் இங்கே கொசுக்கடி இருந்தது, அந்தச் சிறைச்சாலையிலே போட்டார்கள் என்கிறார். அந்த அம்மையார் இருந்த சிறைச்சாலையில் மட்டும்தான் கொசுக்கடி இருந்தது என்று நான் ஏற்கமாட்டேன். போயஸ் கார்டனில்கூட ஏ.சி. ரூம் இல்லேன்னா கொசுக்கடி இருக்கும். நான் குடியிருக்கிற இடத்தில் கூடக் கொசுக்கடி இருக்கிறது. அண்ணா நகரில் கொசுக்கடி இருக்கா இல்லையா என்பது பொதுப் பிரச்சினை. மதுராந்தகத்தில் கூடக் கொசுக்கடி இருக்கும். ஒருவேளை அங்கு அவரே போய்ப் பார்த்துக் கொசுக் கடிக்கிறதா இல்லையா என்று தெரிந்துகொள்ள விரும்பினால், அதை நான் தடுக்க விரும்பவில்லை.

பேட்டி காண்பவர்

நீங்கள் வகிக்கிற கல்வித்துறை பற்றிச் சில கேள்விகள். பொதுமக்களுடைய சார்பில், தனியார் சுயநிதி கல்லூரிகள் இருக்கே, அது கிட்டத்தட்ட ஆங்கிலக் கதையில் வரும் ஷைலாக் மாதிரி - இரத்தம் உறிஞ்சுகிற அட்டைகள் மாதிரி என்னும் கருத்து பரவலாக மக்கள் மத்தியில் இருக்கு. இந்தச் சுயநிதிக் கல்லூரியின் சுரண்டல் தன்மையைப் போக்கி மக்களைக் காப்பாற்ற என்ன செய்யப் போகிறீர்கள்?

இதனை இரண்டு தனிக் கருத்துக்களாக நாம் கருதுவோம். ஒன்று அரசாங்கம் போதுமான அளவுக்குக் கல்லூரிக் கல்விக்காக முதலீடு செய்யக்கூடிய நிலைமையை இழந்து எட்டு, ஒன்பது ஆண்டுகள் ஆகிறது. கடந்த எட்டு, பத்து ஆண்டுகளில் அரசு ஏதேனும் ஒரு கல்லூரியை எங்காவது ஏற்படுத்தி யிருக்கலாம். ஆனால் பொதுவாகக் கல்லூரிகளைத் தனியார் ஏற்படுத்தித்தான் நடத்த வேண்டும் என்ற நிலைமை நாட்டில் ஏற்பட்டுவிட்டது. அப்படித் தனியார் ஒரு கல்லூரி ஏற்படுத்துகிறபோது, ஒரு குறிப்பிடத்தக்க அளவு முதலீடு செய்யாமல் கல்லூரி நடத்த முடியாது. முதலீடு செய்கிற யாராக இருந்தாலும் வணிகராகத்தான் மாறுவார்கள். அதைப்போல் சமூகத்தில் வசதியுள்ள வர்கள் தங்களுடைய பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டும் என்று விரும்புகிறபோது, அதில் நேரிடையாக அரசு நடத்துகிற தேர்வுகளிலே போட்டியிட்டு, அதிக மதிப்பெண்கள் பெற்று தகுதியினால் முன்னிடம் பெற்றும் அவர்கள் அரசுக் கல்லூரியில் சேர்ந்தால் தவிர. அவர்களின் தகுதி குறைவாக இருக்கிறபோது கருநாடகத்திலே, ஆந்திராவிலே உள்ள ஒரு கல்லூரி யிலே சேர்ப்பதைவிட, இங்கேயே பணம் கொடுத்துச் சேர்ப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஒரு பக்கம் தேவையுள்ளது (Demand). இன்னொரு பக்கம் நிதி வசூலிப்பதாகப் புகார் (Complaint). இந்த இரண்டையும் சுயநிதி கல்லூரி குறித்து இணைத்தே பார்க்கவேண்டும். அப்படிப்பட்ட தேவை உடையவர்களும் தேவையை நிறைவேற்றுபவருமான அந்த இரு சாராருக்கிடையிலே உள்ள இடத்தைவிட அதிகம் பேர் இடம் தேவை என்று போட்டியிட்டு கேட்கிறபோது (Selection and choice) இருக்கிற இடத்தை யாருக்கு அளிப்பது என்று தீர்மானிக்கும் உரிமை நிர்வாகத்துக்குக் கிடைக்கிறது. 5 பேர் இடம் கேட்டு 3

இடம் இருந்தால் அவன் விற்க ஆரம்பிக்கிறான். அந்த 3 பேருக்கும் பணம் கொடுத்து வாங்கும் நிலைமை இருந்தது என்பது உண்மை. அந்த வகையிலே பல பேர் சம்பாதித்தார்கள். சிலர் அதைக் கல்லூரிக்கே செலவிட்டு கல்லூரியை விரிவுபடுத்தி இருக்கிறார்கள். வேறு சிலர் சம்பாதித்ததை என்ன செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இந்த வசூல் முறையைத் தடுப்பதற்குப் பலமுறைகள் இருக்கின்றன. ஒன்று இவ்வளவுக்கு மேல் (பீஸ்) கட்டணம் வாங்கக் கூடாது என்றும் ஒரு வரையறுத்த தொகைதான் சம்பளமாக வாங்கலாம் என்றும் தமிழ்நாடு உயர் கல்வி ஆய்வு மன்றத்தின் மூலமாக அண்மைக் காலத்தில் தெரிவிக்கப்பட்டிருக் கிறது. அந்த வரையறுத்த தொகைக்கு மேல், மாணவர் களிடத்தில் கட்டாயப்படுத்திக் கட்டணம் வாங்குவார்க ளானால், அது பற்றிப் புகார் கிடைக்குமானால் உரிய நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு வாய்ப்பு இருக்கிறது. இரண்டாவது சுயநிதிக் கல்லூரி நடத்து கிறவர்களுள் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர் களின் கல்லூரிகளில், நூற்றுக்கு தொண்ணூற்று ஐந்து இடங்கள் அரசு பட்டியலிட்டு தருகிறவர்களைத்தான் நிரப்ப வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

இப்போது அண்ணா பல்கலைக்கழகத்தில் (Single Window Admission) ஒரே சாளரவழி என்ற முறையில் நடைபெற்ற அந்த ஒருமுனைப்படுத்தப்பட்ட இடம் வழங்கும் முறையில், இட ஒதுக்கீடு அடிப்படையில் அவரவர் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் அமையும் முன்னுரிமைப்படி (priority) அழைத்து அவர்கள் எந்தக் கல்லூரியில் சேர விரும்பினாலும் அங்கு மீதம் இடம் இருக்குமானால் இடம் கொடுக்கப்பட்டு அங்கு போய்ச் சேர்ந்துள்ளனர். அந்த முறையிலே (capitation fees) தலைக்கட்டணம் செலுத்த வேண்டிய நிலை மாற்றப் பட்டுவிட்டது. அரசாங்கம் மூலமாக மாணவர்கள் சேர்க்கப் பட்ட முறையால் அந்த மாணவர்கள் Capitation Fees கட்டத்

தேவையில்லாமல் ஆகிவிட்டது. அவர்களுள் ஒரு சாரார் அரசுக் கல்லூரியிலே எவ்வளவு சம்பளம் கட்ட வேண்டுமோ அவ்வளவுதான் கட்டவேண்டும். இன்னொரு சாரார் ஐம்பது சதவிகித சுயநிதிக் கல்லூரிக்காக என்று தீர்மானிக்கப்பட்டுள்ள அந்த உயர்ந்த விகிதத்தில் சம்பளம் கட்டவேண்டும். ஏற்கனவே ஒரு இலட்சம் இரண்டு இலட்சம் வாங்கியதாகச் சொல்லப்படுகின்ற அந்தச் செய்திகள் இப்போது குறைந்துவிட்டன.

மேலும் இந்த ஆண்டு ஏராளமான சுயநிதிக் கல்லூரிகளைத் தமிழக அரசு மறுப்பின்மை சான்று மூலம் அனுமதித்துள்ளது. அவர்கள் AICTE *மூலமாக அகில இந்தியப் பொறியியல் கல்வி மன்றம் மூலம் அனுமதி பெற்றுத்தான் கல்லூரிகளைத் தொடங்க வேண்டும். அந்த அனுமதி பெறுவதிலே இரண்டு, மூன்று மாதம் தாமதமாகிவிட்டது. ஆகவே அக்டோபர் திங்களில், நவம்பர் திங்களில் கல்லூரிகள் தொடங்கினால் இந்த ஆண்டுப் படிப்பு முறையாக அமையாது என்ற அடிப்படையில் இந்த ஆண்டு தொடங்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளோம். அடுத்த ஆண்டு 30, 40 கல்லூரிகள் பொறியியல் கல்லூரி, கலைக்கல்லூரி முதலானவை வரும். அப்படி வருகிற போது* (Demand and supply) *தேவையும் வழங்கலும் ஒன்றுக்கொன்று சமமாகும் நிலைமை வரும். அப்பொழுது இடையிலே தரகர் மூலமாக அதிகக் கட்டணம் வாங்கக் கூடிய வாய்ப்பு குறைந்துவிடும். எதிர்காலத்திலே அந்த நல்ல நிலை உருவாகும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.*

பேட்டி காண்பவர்

நான் கேள்விப்பட்ட வரையில் தமிழகம் முழுக்க ஏறத்தாழ 1500 நூலகங்கள் இருக்கின்றன. அந்த 1500 நூலகங்களுக்கும் - எல்லா நூலகங்களுக்கும் ஒரு நூலகத்திற்கு ஒரு நூல் வாங்கினால் கூட 1500 புத்தகங்களைத் தனியார் பதிப்பகத்திலிருந்து தமிழக அரசு வாங்கலாம். ஆனால் நல்ல புத்தகங்கள்கூட, நல்ல பதிப்பகங்கள் மூலம்

வெளிவந்தாலும் 500 நூல்கள் அல்லது 600 நூல்கள்தான் நூலகத்துறை வாங்கும் என்று கூறப்படுகிறது. அதைப்பற்றி ஏகப்பட்ட விதிமுறைகள் வைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது!

பேராசிரியர்

பொதுநூலகங்களை இரண்டு மூன்று வகையாகப் பிரித்துச் சொல்லலாம். 1500 நூலகங்கள் இருந்தாலும் ஒவ்வொரு நூலகத்துக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கிப் புத்தகங்கள் வழங்கலாம் என்று வரையறை உள்ளது. அந்தந்த மாவட்ட (செஸ் நிதி) நூலக நிதியை வைத்துத் தான் அந்தந்த மாவட்ட நூலகங்களுக்கு வழங்கலாம். எல்லா மாவட்டத்திலும் ஓரளவுக்கு செஸ் நிதி கிடைத்தாலும், இவ்வளவு பணம் தாராளமாக ஒதுக்கலாம் என்ற நிலைமை கிடையாது.

ஒரு மாவட்டத்துக்கு ஒரு இலட்சம் நிதி கிடைக்கும் அவர்கள்(செஸ் நிதி) கணக்கில் வரும். இன்னொரு மாவட்டத்துக்கு 50,000 கிடைக்கும். கோயம்புத்தூர் மாவட்டம் போன்றவற்றில் ஒன்று, இரண்டு இலட்சம் கிடைக்கும். அவைகளைக் கொண்டுதான் அந்தந்த மாவட்டக் கிளை நூலகங்கள் வளரவேண்டும். ஆகவே எல்லா நூலகத்திற்கும் நேரடியாக மாநில அரசினுடைய கணக்கில் எல்லோருக்கும் ஒரே அளவாக அனுப்ப இயல்வதில்லை. இரண்டாவது, புத்தகம் வெளியிடு வதிலே பலபேர் வெளியிடும் புத்தகம் நன்றாகவே இருக்கிறது என்று யாராலும் எளிதில் கூறமுடியாது. நூலகத்திற்கு வாங்குவார்கள் என்று கருதியே புத்தகம் வெளியிடுகிறார்கள் பலர். ஆசிரியர்கள் ஆராய்ச்சி செய்து புத்தகங்கள் வெளியிட்டு அந்த நூல்களை அனுப்பி வைத்து அவைகளை நாங்கள் தேர்ந்தெடுக்கக் கூடிய நிலைமை இல்லை. நூலகத்திற்குக் கொடுப்பதற் கென்று அச்சிட்ட புத்தகங்கள் பல வருகின்றன. இங்கே வாங்குவது 1500படிகள் என்றுகருதி, அந்தக் கணக்கிலே நூல் அச்சிடும் நோக்கத்திற்காக நூலகத் துறையை நான் அடிமைப்படுத்தமுடியாது.

நல்ல நோக்கத்திலே அச்சிடுபவர்கள் உள்ளனர். சிறந்த ஆய்வு நடத்தியே நூல் வெளியிடுகின்றவர்களும் உள்ளனர். நூலகத்திற்குச் சப்ளை பண்ணலாம் என்று அச்சிடுகிறவர்களும் பலர். அப்படியெல்லாம் இருந்துங் கூட அந்த நூல்களையும், பக்கங்கள் எத்தனை, எந்த மாதிரி அச்சு, எந்த வகையான தாள், அதற்கு என்ன விலை என்று தீர்மானித்து நூலகத்துறை வாங்குகிறது. அந்த விலையைக்கூட அண்மையிலே உயர்த்திக் கொடுத்து ஏற்கனவே இருந்ததைவிட ஒரு புத்தகத்திற்கு ரூ.1.50 அல்லது ரூ.2.00 விலை அதிகம் தரும்படியாக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ரூ.5க்கு வாங்கப்பட்டதை இன்றைக்கு ரூ.6.50க்கு வாங்குகிறோம். ரூ.7.00க்கு வாங்குகிற புத்தகம் ஏறத்தாழ 9 ரூபாய் அளவில் வாங்குகிறோம். விலையைக்கூட உயர்த்தி உள்ளோம். ஆனாலும் எல்லா புத்தகங்களும் எல்லா நூலகத்திலும் வைப்பதற்கு நிதி இல்லை.

எல்லோருடைய புத்தகங்களையும் ஓரளவேணும் ஆதரித்து வாங்கவும் வழி செய்யப்படுகிறது. புத்தகங்கள் என்று மொத்தமாகப் பார்ப்பது தவிர, (Journal) இதழ்கள் என்று எடுத்துக்கொண்டால், எல்லா வாரப் பத்திரிக்கையும் எல்லோரும் படிக்கவேண்டிய வாரப் பத்திரிக்கையாகவே இருக்கின்றன. **தேர்வு செய்த சில வாரப் பத்திரிக்கை மட்டுமே படிக்கத் தரப்படுமானால் நாடு நன்றாக இருக்கும்**. ஆகவே ஏடுகள் எல்லா வற்றையும் எல்லோரும் படிக்கத்தரவேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. ஆனால் படிக்க விரும்புகிறவர்களுக்குத் தகுந்த அளவுக்குப் பல்வேறு புத்தகங்கள் கிடைக்குமாறு கிளை நூலகத்திற்கு ஓரளவுக்கும், சிறப்பு நூலகங்களுக்கு அதிகமாகவும், மாவட்ட மைய நூலகங்களுக்குப் பேரள விலும் வேறுபாடு வைத்துப் புத்தகங்கள் வழங்கப்படுகிறது. அதற்காக ஒரு குழு அதாவது மாநில நூலக ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர், அமைச்சர், இன்னும் சில சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு அமைத்திருக்கிறோம்.

அண்மைக்காலத்திலே ஒரு முறை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. புரவலர்கள் பலரைச் சேர்த்து அவர்கள் மூலம் கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி நூலகங்களில் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடலாம் என்று கருதி யுள்ளோம். இன்று பல நூலகங்களுக்குக் கட்டிடம் கிடையாது. பல நூலகங்கள் வாடகைக் கட்டிடத்தில் இயங்குகின்றன. பல நூலகங்கள் தற்காலிகமாக வாடகையின்றித் தரப்பட்ட இடங்களில் இயங்குகின்றன. இவைகளுக்குக் கட்டிடம் கட்டுவதற்கு ஒரு சிறிய கிளை நூலகத்திற்கு இரண்டு இலட்சம் தேவை. தகுந்த நூலகத்திற்கு நான்கு இலட்சம் வேண்டும். மாவட்ட நூலகமாக இருந்தால் பத்து இலட்சம் அதற்காகவே கிடைக்கிற நிலப்பரப்பு அளவைப் பொறுத்தும் இந்தக் கட்டிடப் பணி நடைபெறவேண்டும். இவைகளை எல்லாம் ஒழுங்கு படுத்துவதற்காகத் தகுந்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. ஆனாலும் பொதுமக்களுடைய இயக்கமாக ஆகவில்லை. நான் 90வது ஆண்டு 91ஆம் ஆண்டு இரண்டு ஆண்டுகள் கல்வி அமைச்சராக இருந்தபோது ஒரு முயற்சி எடுத்துக் கொண்டேன். புரவலர்களாக ஆங்காங்கு பலரைச் சேர்த்தோம். நான் மறுபடியும் இந்தப் பொறுப்பு ஏற்றபின் அந்த இயக்க உணர்வை ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டிருக் கிறேன். பொதுமக்கள் ஆர்வமும், ஆதரவும் காட்டுவார்க ளானால் அந்த அளவிற்கு நூலகத்துறை வளரும் என்பேன்.

பேட்டி காண்பவர்

தமிழ் வளர்ச்சித்துறை என்று தனியாக அமைத்து, அமைச்சரையும் தனியாக நியமித்திருக்கிறார்கள் உங்கள் ஆட்சியிலே. ஆனாலுங்கூட, இந்தத் துறையும் ஏற்கனவே கல்வித்துறையிலே இருந்ததுதான். அதனாலே இந்தக் கேள்வியை உங்களிடத்தில் கேட்கிறேன். தமிழிலே அர்ச்சனை செய்யவேண்டும் என்பது ஏற்கனவே தமிழிலும் அர்ச்சனை செய்யவேண்டும் என்று ஆலயங்களில் இருந்தது. தமிழ்நாட்டிலே தமிழிலேயே அர்ச்சனை என்று தமிழறிஞர்கள்

கோரிக்கை வைத்தார்கள். ஆனால் இதற்கு மாறாகச் சில பத்திரிக்கைக்காரர்கள் கேட்கிறார்கள். உங்களை ஒன்று கேட்கிறேன், பெரும்பான்மையாக மக்கள் இதுநாள் வரையில் சமஸ்கிருத அர்ச்சனை வடமொழி அர்ச்சனை என்று வேறுபாடு பார்க்காமல் இறைப்பற்று நிலையில் பக்தியிலே ஊறிப்போய் அர்ச்சனை செய்து வந்தார்கள். அவர்கள் மீது வேண்டு மென்றே தமிழ் அர்ச்சனை என்று மொழிவெறியின் காரணமாகத் திருப்பிவிடறாங்க என்று சொல்வதை நீங்கள் அறிவீர்களா?

பேராசிரியர்

இதற்கு இரண்டு மூன்று பதில் சொல்லலாம். **மொழிவெறி தவறல்ல. மொழியின் பேரால் முட்டாள் ஆக்குகிறவர்களை எதிர்த்திட மொழிவெறி கொள்வது தவறல்ல. எங்களுக்குத் தெரியாத, தமிழர்களுக்குத் தெரியாத வடமொழியை ஆண்டவன் பேரால் அர்ச்சனை என்று திணிப்பது என்பது மொழி வெறியைவிட மோசமானது.** *மொழி மௌடீகமானது. இன்னும் ஒரு படி மேலாக ஆண்டவனுக்குத் தமிழிலே சொன்னால் புரியாததல்ல. ஆண்டவனும் சொல்லவில்லை, ஆண்டவனுடைய உண்மை யான அடியார்களும் சொல்லவில்லை. ஆண்டவனை அழுது அழுது தொழுதவரெல்லாம் தமிழில் தான் பாடிச் சொல்லியிருக்கிறார்கள். 'அர்ச்சனைப் பாட்டே ஆகும்' என்று சுந்தரர் சொல்லியிருக்கிறார். ஞானசம்பந்தர் பாடலைவிட, மாணிக்கவாசகர் பாடலை விட, சுந்தரர் பாடலை விட, அப்பர் பாடலைவிட, ஆழமான கருத்துள்ள வடமொழி அர்ச்சனை ஏடு எதுவும் கிடையாது. இறைப்பற்று வேண்டுமா, வேண்டாமா என்பதிலே என்னுடைய சிந்தனையிலே கருத்து வேறுபாடு உண்டு. இறைப் பற்றுக் கொண்டவர்களுக்கு இயம்பிக் காட்டக் கூடிய தகுதி தமிழுக்கு உண்டே தவிர வடமொழிக்குக் கிடையாது. வடமொழிக்கு மூன்று காரணத்தாலே கிடையாது.*

டாக்டர் சர்.சி.பி. இராமசாமி ஐயர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக

இருந்தார்கள். அவர்கள் தேவாரம் திருவாசகத்தில் ஈடுபாடு உடையவர்கள். வடமொழியிலே புலமைத் தகுதி வாய்ந்தவர்கள். 'சச்சிவோத்தமர்' என்ற பட்டம் அவர்களுக்கு. ஆங்கிலத்திலே விற்பன்னர். திவானாக மட்டுமல்ல, அட்வைசராக அல்லது Board Member ஆக ஆளுநர் நிருவாகக்குழு உறுப்பினராக இருந்தவர். அன்றைய மதராஸ் மாகாணத்திலே அவர்கள் துணை வேந்தராக இருந்தபோது தமிழ் இசை விழா ஒன்றில் பேசுகிறபோது இவ்வாறு குறிப்பிட்டார்கள். **'இறை வழிபாட்டிற்கு ஏற்ற பாடல்களைக் கொண்டதொரு மொழி இருக்கின்றது என்றால் அது தமிழ்தான். தமிழிலே உள்ள அளவிற்கு உள்ளத்தை உருக்குகின்ற இறைப்பாடல்கள் வடமொழியில் கிடையாது'** என்றார். இறைப்பற்று என்பது உள்ளம் உருகத்தொழுவது என்பது சான்றோருடைய வாக்கு.

ஆண்டவனிடத்திலே பேரம் பேசுவதற்காக அல்ல; வியாபாரம் நடத்துவதற்கோ, கமிஷன் ஏஜெண்டாக வைத்துக் கொள்ளவோ அல்ல. கடவுளை அப்படி எதிர்பார்க்கிறவர்கள் அறியாதார். கடவுளிடத்திலே என்னைக் காப்பாற்று என்பது அதைக் கெஞ்சுவது. ஆனால் கடவுள் ஒரு புரோக்கர் அல்ல. கடவுள் என்பது சிந்தனையுடைய எல்லை. அந்த எல்லையை எதற்காக ஒருவன் எண்ணிப் பார்க்கிறான் என்றால் அவனுடைய உள்ளத்திலே ஒருபக்குவம் கிடைப்பதற்கு, உள்ளம் உருகிடும் உணர்ச்சி, இரக்க உணர்ச்சி, பண்புநலன் வளருவதற்கு, அதனை மாணிக்கவாசகர் பாடலாலோ, ஆழ்வாருடைய பாடல்களாலோ, ஆண்டாளுடைய பாடலாலோ பெறக்கூடிய அளவுக்கு, வடமொழியால் பெறமுடியாது என்பது பற்றி சர். சி.பி. இராமசாமி அய்யர் அவர்கள் சொல்லியிருப்பதை நான் குறிப்பிடுவது அவருக்கு வடமொழியிலே வெறுப்புக் கிடையாது என்பதற்காக. அதைவிட இங்கிருக்கின்ற சாதாரண மக்கள் எளிதில் ஆண்டவனை வழிபடுவதற்கு அவர்களுக்குப் புரியாத வடமொழியிலே சொல்லுவது எந்த வகையில் அறிவுடைமை?

ஆண்டவனுக்கு அர்ச்சனை பண்ணினாரா அல்லது ஆண்டவனுக்கு வேறு மாதிரி மந்திரத்தைச் சொன்னார்களா என்பது எப்படித் தெரியும். வழக்க மாகக் கேட்ட காரணத்தில், தொடர்ந்து வருகிற அந்த ஓசை தொடர்ந்து வருகின்ற காரணத்தால் தான் உள்ளே அர்ச்சனைதான் நடப்பதாகப் பெரியவர்கள் கருது கின்றனர். ஆனால் அர்த்தம், பொருள் எப்படித் தெரியும்? திருமண வீட்டில் சொல்கின்ற மந்திரம் எல்லாம் அறிவுள்ள மந்திரமாகவும், பண்புள்ள மந்திரமாகவும் இருக்கின்றதா?

ஒரு பார்ப்பன இளைஞன் கல்லூரியிலே படித்தவன். பின்தங்கிய சமூகத்தார் வீட்டுத் திருமணத் துக்குப் போய் நடத்தி வைத்தான். அவனுக்கு மந்திரம் தெரியாது. ஆட்சிமொழிக்காவலர் கீ. இராமலிங்கனார், அந்த இளைஞன் நடத்தி வைத்ததைப் பார்த்துவிட்டு, எங்கு போய் வருகிறாய் என்று கேட்க அவன் சொன்னான் கல்யாணம் நடத்திவைக்கப் போனேன் என்று. உனக்குக் கல்யாண மந்திரம் தெரியுமா? என்று கேட்க; எனக்கு எப்படித் தெரியும். எங்க தகப்பனாருக்குத் தெரியும் என்றான். அப்படியானால் நீ எப்படிப் போய் நடத்தினாய் என்றார். அங்கிருக்கிறவர்கள் எல்லாம் முட்டாள் கவுண்டர்கள்தான், நான் அங்கே போய் ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரில் படித்த வரிகள் சிலவற்றைச் சொல்லிவிட்டுக் கல்யாணம் நடத்தி வைத்துவிட்டு வந்தேன் என்றான். ஆகவே **தமிழனை முட்டாளாக்கிட ஏதுவாக வடமொழி தேவையா என்பது தான் முக்கியம்**. ஆண்டவனுக்குச் சமஸ்கிருதம் வேண்டுமென்ப வர்கள், அந்தச் சமஸ்கிருதத்தில் வழிபட வேண்டுமானால் அதை நான் தடுக்கவில்லை. தமிழர்களுக்கு வட மொழியிலே தான் அர்ச்சனை மந்திரம் என்று சொல்லும் முறையால் தமிழர்களை அலட்சியப்படுத்தவும், இழிவு படுத்துவதற்கும் வழியாகிறது.

ஒரு தமிழன் ஆட்சி இந்த நாட்டிலே உருவாகியிருக்கும் இந்நாளில், தமிழிலேயே மந்திரங்கள் சொல்லுவதோ அல்லது

அர்ச்சனைப் பாட்டு சொல்வதோ ஒன்றும் தவறல்ல. இன்னும் சொல்லப்போனால், யாராவது குறும்புத்தனமாக அர்ச்சனையில் அரசியல் சார்புக் கருத்துக்களைச் சேர்த்திருப்பார்களேயானால் அது தவறு; கண்டிக்கத் தக்கது. மாணிக்கவாசகரின் சொல்லோட்டம் நாம் சொல்லுகிற வார்த்தைகளில் இல்லை. அர்ச்சனை என்பது ஆண்டவன் பெயர்களை வரிசையாகச் சொல்லுவது. சகஸ்ரநாம அர்ச்சனை என்றால் ஆயிரம் முறை சொல்லுவது, மேலும் சொல்வது கோடி அர்ச்சனை என்பார்கள். எத்தனை தரம் வேண்டுமானாலும் சொல்லட்டும். இதைத் தமிழில் சொன்னால் என்ன தவறு? இன்னும் பேர்களைச் சொல்வதில் வடமொழி என்ன உயர்வு? தமிழ் என்ன தாழ்வு? வெங்கடராம அய்யர் என்பது வடமொழியிலேயும், வெங்கடராம அய்யர்தான் தமிழிலேயும், வெங்கடராம அய்யர் தான்! பெயர் வரிசை சொல்லும்போது இடையிலே இரண்டு வார்த்தை சமஸ்கிருதம் எதற்கு? இதை சமஸ்கிருதத்தில் சொன்னதனால் எந்தக் கோயிலிலேயும் இடிவிழாமல் இருந்ததா? எந்தக் கோயிலிலும் திருட்டுப் போகாமல் இருந்ததா?

கோவை சி.எம். இராமசந்திரன் செட்டியார் இந்து அறநிலையத் துறையின் முதல் ஆணையராக இருந்தார். அவர் எழுதிய புத்தகம் 'கோயில் பூனைகள்' என்பது. வடமொழியிலே மந்திரம் சொல்லி வந்த கோயில்களில் பலவற்றில் நகைகள் - சொத்துக்கள் காணாமல் போயின. அதற்கு மேல் விளக்கம் வேண்டாம். அதனால் சமஸ்கிருத மந்திரத்தினால் கோயில் சொத்தைக்கூடக் காப்பாற்ற முடியவில்லை. மேலும், தமிழில் அர்ச்சனை சொல்வது பகுத்தறிவுக் கொள்கை அடிப்படையிலே கட்டாயமல்ல. ஆண்டவனை வழிபடுவதையே வேண்டாம் என்று சொன்னவர் பெரியார். எல்லாம் அறிந்த ஆண்டவனுக்கு நாம் ஏன் தமிழில் சொல்லவேண்டும் என்று கேட்பார்கள். ஆனால் அந்த உரிமை, மக்களுடைய உரிமை. **அந்த உரிமையை மறுக்கும் வாதத்தை எடுத்து**

வைப்பவர்கள் இந்தக் காலத்திலே வாழ்வதற்கான முழுத்தகுதி பெற்றவர்களல்ல.

பேட்டி காண்பவர்

இனி உங்களுடைய வாழ்க்கையைப் பற்றி - உங்களுடைய அரசியலில் நீங்கள் நடந்து வந்த பாதை பற்றிச் சில கேள்விகள். நீங்களும், நாவலர் நெடுஞ்செழியனும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே ஒரே காலக்கட்டத்தில் படித்து, சுயமரியாதை இயக்க வீரர்களாக இந்த இயக்கத்திலே ஒப்படைத்திருக்கிறீங்க. பின்னர் அரசியல் பாதையிலே நாவலர் உங்களைவிட்டுப் பிரிந்து போய் வேறு முகாமில் இருக்கிறார். இன்றைக்கும் அந்த நட்புரிமை உங்களிடையே இருக்கிறதா? அவருடைய பாதை இப்படி ஆகிவிட்டது என்று நீங்கள் வருத்தப்படுவதோ அல்லது நீங்கள் இப்படி இருக்கிறீர்கள் என்று அவர் வருத்தப்படுவதோ உண்டா?

பேராசிரியர்

இதற்கெல்லாம் வாய்ப்பே இல்லை. நாங்கள் இரண்டு பேரும் இயக்கக் கொள்கை, எங்களுடைய தனிப்பட்ட உணர்வுடன் ஒத்து வருவதை உணர்ந்து இயக்கத்தில் சேர்ந்தோம். நான் இந்த இயக்கத்தில் அடியெடுத்து வைத்து, மேடையில் பேசுகிற காலத்தில் அவர் பேச்சாளர் அல்ல. அப்புறம் ஓராண்டு கழித்துத்தான் பேச்சாளர் ஆனார். 1944இல் கல்லூரியினை விட்டு வெளிவரும்போதுதான் இயக்கத்தின் மேடைப் பேச்சாளராக வந்தார். நான் 41இல் இருந்து கட்சி மேடையிலே பேசுவேன். காரணம் நான் கட்சிக்காரனாகப் பல்கலைக்கழகத்திலே படித்தேன். அவர் சுயமரியாதைக் கொள்கையுடையவராயினும் படிக்க வந்த நிலையில் கட்சிக்காரர் ஆனார்.

அறிஞர் அண்ணா அவர்களிடமே அவர் கேட்டார் – நீதிக் கட்சியிலே இருக்கிறீர்களே அந்தக் கட்சி எப்படி நம் நாட்டுக்கோ மாணவர்களுக்கோ முற்போக்குக் கொள்கை வளர்க்கப் பயன்படும் என்று – அப்போது நான் அண்ணாவோடு அந்தக் கட்சியிலே இருக்கிறேன்.

ஆகவே அவர் இயக்கத்திற்கு வந்த வகையிலே என்னை விட ஜூனியராகவோ அல்லது என்னோடு தகுதி குறைந்தவராகச் சொல்லவில்லை. தமிழ் இலக்கியங்கள் படிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். ஏராளமான பாடல்களை மனப்பாடம் செய்து, மேடையில் சொல்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைவார். நல்ல கொள்கைப் பற்று உடையவர். அரசியலில் தன்னை முன்னிலைப்படுத்தி அரசியல் நடத்தி வருகிறபோது சில தவறுகள் நடக்கத்தான் செய்யும். **கொள்கையை முன்னிலைப் படுத்தி அரசியல் நடத்தினால் குறை வராது**.

குற்றங்கள் வருவதற்கும் வாய்ப்பு குறைவு. எம்.ஜி.ஆராக இருந்தாலும் சரி, நெடுஞ்செழியனாக இருந்தாலும் சரி, தங்களைப் பற்றியே கருதவேண்டிய அளவுக்கு ஆளாகிவிட்டார்கள். தங்களுக்கு ஒரு செல்வாக்கும் மதிப்பும் இருக்கிறது. கலைஞர் முதலமைச்சராக வந்ததனால் அந்த மதிப்பு போய்விடும் என்று நெடுஞ்செழியன் நினைத்தார். அதுதான் அவர் கொண்ட முதல் மாறுபாடு. யார் முதல்வராக வந்தாலும் நம் கொள்கை இருக்கிறது என்று நினைக்கவில்லை. கருணாநிதி வந்ததாலும் நம் கொள்கை பாதுகாக்கப் படும் என்று அவர் நினைக்கவில்லை. அவர் ஏற்கனவே பொதுச்செயலாளராக இருந்த காரணத்தினால் ஒரு சீனியர் கட்சிக்காரர் என்பது ஏற்கப்பட்டது தான். ஆனால் சனநாயக முடிவை அவரால் ஏற்க முடியவில்லை. அண்ணாவால் அன்பு காட்டப்பட்டவர், மதிக்கப்பட்டவர். கட்சியை வளர்த்திட அண்ணா அவர்கள் எல்லாரையும் மதித்துத்தான் நடத்தினார்கள். நாவலர் என்னோடு நல்லமுறையில் தான் பழகி வந்தார். என்னுடைய இயல்பு என்னவென்று கேட்டால் கொள்கை, கட்சி, அதற்கான விளக்கம், அதற்குரிய மேடை, அங்குதான் எனக்கு நண்பர்கள். வெளியிலே நான் நண்பர்களைத் தேடமாட்டேன். அது எனக்கமைந்த பழக்கம். நான் பணியாற்றிய கல்லூரி ஆசிரியர் என்ற முறையில் தான் நண்பர்கள் பலர். அவ்வளவு தான்.

பணியினையொட்டித் தான் எனக்கு நட்பு ஏற்படும். இதை நான் பல இடத்தில் சொல்லி இருக்கிறேன். கழகத் தலைவர் கலைஞரிடம் கூட எனக்குத் தனிப்பட்ட நட்பு கிடையாது. **நான் எந்தக் கொள்கையை விரும்புவேனோ அந்தக் கொள்கையை அவர் பலவகையிலும் காப்பாற்றுகிறார். அவர் காப்பாற்றுவதோடு மட்டுமல்லாமல் அதை நிலை நாட்டுகிற தகுதியும் திறமையும் அவருக்கிருக்கிறது. ஆகவே நான் அவரோடு இருக்கிறேன்.** எனக்கு விருந்து சாப்பிட்டு, வேடிக்கை பார்த்து, நட்பை வளர்க்கும் முறையைச் சுவைக்க முடியாது. இன்னும் சொல்வதானால் என்னை ஒருவர் பாராட்டுகிறார் என்பதற்காக நான் அவர்களைப் பெரிதாக மதித்து ஏற்றுக் கொண்டது கிடையாது. அந்த முறையிலே நாவலர் இயக்கத்தில் இருந்தபோது நல்லமுறையில் நண்பனாகப் பழகினேன். அவர் சென்ற பாதை பிரிந்து போயிற்று. அதற்கப்புறம் பழகுகிற வாய்ப்புக் குறைந்தது. எப்போதாவது பார்த்தால் ஒருவரை ஒருவர் நலமா என்று கேட்போம். இன்னும் சொல்லப்போனால், அவருடைய மருமகளும், என்னுடைய மருமகளும் கூட உறவினர். சித்தப்பா, பெரியப்பா பெண்கள். அதற்காகக்கூட நான் அதிகமாக உறவு முறையில் தொடர்பு வைத்துக் கொள்ளமாட்டேன். இந்த இயக்கத்திலே கூட நான் யாரிடம் அதிகமாக பழகுகிறேன் எனில், யார் இயக்கத்தில் அதிகம் வேலை செய்கிறார்களோ, அவர்களிடந்தான் பழகுகிற வாய்ப்பு அமையும். கொஞ்சம் வேலை செய்யாமல் இரண்டு மாதம் ஓய்வாக இருப்பவர் களிடத்தில் பழகுகிற வாய்ப்பு குறையும். நான் நட்பைத் தேடிப் போகும் பழக்கமற்றவன். ஆனால் எனக்கு ஒரு அழுத்தமான நம்பிக்கை. **ஒரு கொள்கையை ஏற்றுச் சொல்வதில் தான் மனித வாழ்க்கைக்குப் பொருளும் இலட்சியமும் இருக்கிறது**. எது வாழ்வில் வெற்றி பெற்றாலும், தோற்றாலும் மனிதனுடைய கடைசி நாளில், என் மனதில் தோன்றிய நியாயமான கொள்கையைத் தான் நான் இறுதி வரை சொன்னேன் என்பதிலே ஏற்படும் நிறைவு வேறு எதிலேயும் ஏற்படாது.

என் தாய் மொழி தமிழ், என் இனம் தமிழினம், நான் போற்றுகிற இலக்கியம் சங்க இலக்கியம். என் வழிகாட்டி திருவள்ளுவர். நான் மனிதனாக உணர்ந்தது, உணர்வு பெற்றது பெரியாரால்; அறிவோடு செயல்பட்டது அண்ணாவால் என்று இப்படிச் சொல்கின்ற இந்த உணர்வோடு ஒட்டி வளரும் எண்ணங்களில்தான் எனக்கு மன நிறைவே *தவிர, நான் எம்.எல்.ஏ. ஆனேன், எம்.பி.ஆனேன், அமைச்சராக இருக்கிறேன், என்பதிலே பெரிய மனநிறைவு காணவில்லை. ஆனால் எந்த இடத்திலே இருந்தாலும் இலட்சியப் பணியாற்ற வேண்டும். அந்த முறையிலே எம்.ஜி.ஆர். முதன்முதல் கழகத்தை விட்டு விலகுகிறபோது, அதற்கெல்லாம் என்ன காரணம் என்பது எனக்குத் தெரியுமாதலால் அவருடைய போக்கையோ, அவர் எடுத்த முடிவையோ, நான் பெரிதாக நினைக்க எனக்கு அவசியம் ஏற்படவில்லை. அவர் விலகிச் சென்ற சூழ்நிலையிலே பொருளாளர் பொறுப்பில் நான் இருந்தால் நல்லது என்று முன்னணித் தோழர்கள் நினைத்தார்கள். அதனால் அப்போது எனக்குப் போட்டியில்லை. அப்புறம் 2 ஆண்டுகள் கழித்து நாவலர் விலகிச் சென்றார். பின்னர் திரும்பினார். திரும்ப இரண்டாவது முறையாக அவர் விலகிப் போனபோது திரும்பிவருமாறு அழைத்தும் அவர் வரவில்லை. அப்புறம் நான் பொதுச் செயலாளராக வரவேண்டிய அவசியம் வந்தது; ஏற்றேன். நான் போய் உட்காரவேண்டிய இடம் காலியாக இருந்தால்தான் அங்கு உட்காருவேனே தவிர, இன்னொருவர் இருக்கிற இடத்தையோ, விரும்புகிற இடத்தையோ இன்னொரு வருக்கு உரிய பதவிக்கோ நான் ஆசைப்பட்டதில்லை. ஆகவே எனக்கு அரசியலிலே தனிப்பட்ட முறையில் எவரிடமும் மாறுபாடில்லை. கொள்கைக் கருத்து வழி வேறுபாடுதான்.* (Individual influence) *தனிப்பட்டவர் செல்வாக்குக்கு நான் என்றும் ஆட்பட்டதில்லை.*

பேட்டி காண்பவர்

உங்களுடைய கொள்கைப்பற்றும், அதிலே நீங்கள் அழுத்தமாக இருப்பதில் இளைய தலைமுறைக்கு வழிகாட்டுதலாக இருக்க வேண்டும். வருகிற டிசம்பர் மாதம் பவளவிழா காணும் உங்களுக்கு, 'சன்' தொலைக்காட்சி நேயர்கள் சார்பில் முன்கூட்டியே எங்கள் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் எதிர்காலத்தில் நிச்சயமாக ஒரு சுயசரிதையைத் தமிழ் உலகத்திற்குத் தரவேண்டும். அதில் பல சம்பவங்களை - விட்டுப்போன, வெளி உலகத்திற்குத் தெரியாமல்போன சம்பவங்களை விரிவாக எழுதித் தரவேண்டும் என்ற எங்களது அன்பான வேண்டுகோளையும் முன்வைத்து, நிகழ்ச்சியில் பங்கேற்றதற்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர்

இந்த நிகழ்ச்சியை அமைத்து, என்னை அழைத்து, இவ்வளவு ஆழமாகத் திராவிடர் இயக்கத்தைப் பற்றிய பல கேள்விகளைக் கேட்டு, என்னுடைய உள்ளத்தைத் திறந்து பேசுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பினை உருவாக்கித் தந்த தோழர் வீரபாண்டியன் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். 'சன்' தொலைக்காட்சி நிறுவனத்தாருக்கு என்னுடைய நன்றி உரித்தாகுக. தமிழ்நாட்டு மக்களுக்கு நல்ல கருத்து வழங்குவதை 'சன்' தொலைக்காட்சியும், அதே போல நேர்முகப் பேட்டி நடத்துகிற வீரபாண்டியன் அவர்களும் ஒரு இலட்சியமாகக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன்.

கழகப் பொதுச்செயல்ாளர் இனமானப் பேராசிரியர் அவர்களின் பத்துக் கட்டளைகள்

தமிழர்களே! தமிழர்களே!

1. தமிழிலேயே கையொப்பம் போடுவீர்.
2. உங்கள் குழந்தைகளுக்கும், இல்லங்களுக்கும், நிலையங்களுக்கும், வாழிடங்களுக்கும் தமிழிலேயே பெயர் வைப்பீர்.
3. குழந்தைகள் எங்குப் படிப்பினும், தமிழை நன்றாகப் படிக்கச் செய்யுங்கள்! பிறமொழிகளை மொழிஅறிவிற்காகவே படிக்கட்டும். அந்நிய மொழியே அவர்தம் வாழ்க்கை – விழியாக ஆகவிடாதீர்.
4. 'தமிழன்' என்ற உணர்வில் நிலை பெறுவீர்! சாதி உணர்வில் மயங்காதீர்! எல்லோரும் 'தமிழர்' என்னும் உணர்வில் ஒன்றுபடுவீர்!
5. சமய வேற்றுமை கருதாது – தமிழர்கள் அனைவரையும் ஒரினமாக ஏற்பீர்.
6. தமிழரின் சிறப்புக்குரிய விழாக்களைக் கொண்டாடுவீர். இன இழிவுக்குக் காரணமான விழாக்களைப் புறக்கணிப்பீர்!
7. உண்மையுள்ளவன், சொன்னசொல் பிறழான், தன்மானம் உடையவன், தன் இனப் பெருமையைக் காப்பவன் தமிழன் என்பதை நிலைநாட்டுவீர்!
8. ஒவ்வொரு நாளும் உறங்கப் போகும் முன் தமிழ் இன மீட்சிக்கு இன்று என்ன செய்தோம்? என்பதை எண்ணிப்பார்ப்பீர்! நாளொரு பணியேனும் நிறைவேற்றுவீர்.
9. தமிழர் – தம் மொழியையும் இனத்தையும் மதித்து நடந்தால்தான் – பிறர் நம்மை மதிப்பர் என்பதை மறவாதீர்.
10. 'பொச்சாப்புக் கொல்லும் புகழை' என்றார் வள்ளுவர். அந்த மறதி நம் இனத்தையே அழித்து விடும் மறவாதீர்!

நன்றி : 'பெரியார் இயக்கம்' நாத்திகத் திங்களிதழ், தஞ்சை 613 001